# வெள்ளிமலை

இதழ் – 07

ஆடி 2009

50/=




புன்னாலைக்கட்டுவன் அ.த.க பாடசாலையில்
நடமாடும் நூலக சேவை




தாவடி விநாயகர் முன்பள்ளியில்
நடமாடும் நூலக சேவை






வலி. தெந்கு பிரதேச சபையின் தெருவெளி நாடகம்
"நித்தம் நித்தம் சுத்தம்"



அண்ணா தொழிலக நிறுவுநர்
பொ. நடராசா




# வெள்ளிமலை


வலிகாமம் பிரதேச வளங்கள், திறன்கள் வெளிக்காட்டிடும் சஞ்சிகை

மலை : 03 ஆடி 2009 வெள்ளி : 07


இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வுவேண்டில்
புத்தக சாலைவேண்டும் நாட்டிலியாண்டும்
- பாவேந்தர் பாரதிதாசன் -


வலிகாமம் தெற்கு பிரதேச
வாசகர் வட்ட வெளியீடு

இணை ஆசிரியர்கள்
க. சௌந்தரராஜன்
திருமதி இ. கருணாநிதி

ஆசிரியர் குழு
திரு. அ. தற்பரானந்தன்
திரு. ஐ. இராமசாமி
திரு. சு. ஶ்ரீகுமரன்
திரு. ப. சிவானந்தசர்மா
திரு. சி. றமேஷ்
திரு. கு. றஜீபன்
செல்வி. ஶ்ரீ. ஶ்ரீரங்கநாயகி

தொடர்புகளுக்கு
வெள்ளிமலை
சுன்னாகம் பொதுநூலகம்
சுன்னாகம்.

அச்சுப்பதிப்பு
கிருஷ்ணா பிறின்டேர்ஸ்,
டாக்டர். சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.


இச்சஞ்சிகையில் வெளியாகியுள்ள ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாளிகளாவர்.

## மலைமீதிலே


எண்ணச்சாரல் 02
இறை அன்பு - வ. குமாரசாமி ஐயர் 03
ஞாபகம் வருகிறதா 06
விடியலுக்காய் - "நற்சோலை" 07
பின்னவர் அறிய வழி ... - இ. கணேசராசா 08
சுன்னாகம் குறித்த இடப்பெயர் ஆய்வு - நம்பி 09
எழுக / வெள்ளாடு - இலட்சுமி புத்திரன் 11
கமலனும் விமலனும் - "சின்னண்ணா" 12
பாதீனியம் களை - ச. திருக்குமார் 15
அழுவதா சிரிப்பதா - ச. நளாஜினி 17
மௌனவலி - எஸ் அருட்குமரன் 18
இவையா விதித்த விதியோ - பா. பாலச்சந்திரன் 20
அப்படியொரு பிணைப்பு - எம். இந்திராணி 21
ஊன்றுகோல் - இணுவையூர் ஆனந்தலட்சுமி 22
காசிவாசி செந்திநாதஐயரின் பணிகள் - த.சண்முகநாதன் 26
இலக்கிய வரலாறு என்னும் .... - மகாலிங்கசிவம் • முரளி 28
உலக புத்தகதின விழா 32
அரங்கை அறிவோம் - எஸ். ரி. அருள் 34
மெய்ப்பாட்டியலும் மரபியலும் - மு. பா. துவாரகன் 36
பன்னுதமிழ் சொன்ன மன்னாகத்தான் - சி. ரமேஷ் 41
அண்ணா - 50 - எஸ். ரி. அருள் 47
நூலகமும் நிகழ்வுகளும் 50

## எண்ணச்சாரல்

## உள்ளூராட்சி சேவைகள்

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயகக் கொள்கைகள், நடை முறைகள் மூலம் தேசிய அபிவிருத்திக்கும் ஒட்டுமொத்த நல்லாட்சிக்கும் பெரும்பங்களிப்புச் செய்கின்றவை உள்ளூர் மட்டத்தில் அமைக்கப்படுகின்ற சுயாட்சித் தன்மையுடைய உள்ளூராட்சி சபைகளாகும்.

இச் சபைகள், தமது நிருவாகப் பிரதேசத்திலுள்ள பொது மக்களுடன் தொடர்புபட்ட விவகாரங்களை ஒழுங்குபடுத்தி, நிருவகிக்கின்றன.

கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்புதலின் பொருட்டான திட்டங்களை மக்களின் பங்கேற்புகளின் ஊடாக மேற்கொண்டு, உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி பொருளாதார ரீதியான அபிவிருத்தியையும், பிரதேச, தேச அபிவிருத்திகளையும் மேற்கொள்வன உள்ளூராட்சி அமைப்புகளாகும். இவை ஆற்றுகின்ற சேவைகளையிட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ளவும், மக்களின் பங்கேற்புக்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருவதற்காகவும் ஒழுங்குபடுத்தப் படுகின்ற தேசிய நிகழ்வாக உள்ளூராட்சி வாரக் கொண்டாட்டங்கள் அமைகின்றன.

காலத்துக்குக் காலம் இச் சபைகளுக்கான தேர்தல்கள் நடை பெற்று, பிரதேச மக்களின் ஜனநாயக உரிமை பிரயோகிக்கப்பட்டு, தமக்கென நல்லாட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்க வாய்ப்புகள் இருந்து வருகின்ற போதிலும், வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு நடைபெற்று வந்த யுத்தச் சூழ்நிலையில் இச் சந்தர்ப்பங்கள் பல காரணங்களால் இல்லாமலேயே போய்விட்டன.

ஆயினும் எதிர்ப்படுகின்ற சவால்களை ஏற்று, அதனூடாகத் தமது உரிமைகளை நிலைநாட்ட விழைகின்ற மனிதனின் பண்புக்கு அமையக் கடந்த காலங்களின் மீது எல்லாவற்றுக்கும் பழியைப் போட்டுவிட்டுச் சோம்பியிராமல் நாளைய தினத்துக்கான நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புதலே புத்திசாலித்தனமானதாகும். இவ்வாண்டின் தேசிய உள்ளூராட்சி வாரத்தின் தொனிப்பொருளான,

**"வினைத்திறன் மிக்க உள்ளூராட்சி சேவைகளினூடாக**
**நட்பு மிகு நாடு; வளம் மிகு நாளை"**

என்பதை உள்வாங்கி மூன்று காலத்தையும் உணர்ந்து செயற்படுவது நம் அனைவரது கடமையும் பொறுப்பும் ஆகும்.



அண்டசராசரங்கள் அனைத்தையும் படைத்துக் காத்து வரும் மேலாம் பரம்பொருளின் திவ்விய கருணையை நாம் உற்று நோக்கும் போது, அங்கே காணப்படும் அன்பின் வெளிப்பாட்டை உணர்ந்து கொள்கின்றோம். அதி அற்புதமான சிருஷ்டியின் சிறப்புக்களைச் சிந்திப்போமானால் அன்புதான் அங்கு பரந்து விரிந்து இருப்பதனை உணரமுடிகின்றது. வானுயர்ந்த மலைச்சிகரங்கள். அதிலிருந்து உற்பத்தியாகித் தவழ்ந்து வரும் நன்னீராறுகள். வானிலே மெல்லென வீசும் இளங்காற்று. விண்ணினின்றும் வழங்கப்படும் மழை. மாறுபாடின்றி உதித்து ஒளி தரும் சூரிய சந்திரர்கள். இவையெல்லாவற்றின் பயன்பாட்டினால் குளிர்ந்து மகிழ்விக்கும் மண்ணின் கொடைகள். இவை எல்லாம் எமக்காக எம்மை நல்ல வண்ணம் வாழ வைப்பதற்காய் இறைவனால் எமக்கு அருளப்பட்ட அருங்கொடைகள் ஆகும். இவ்வரிய அற்புதமான அதிசயமான கொடைகளை இறைவன் எமக்காக ஏன் படைத்தான்? என்று சிந்திக்கும் போது அங்கே கருணையின் வெளிப்பாடு புலனாகின்றது.

# இறை அன்பு

வ. குமாரசாமிஐயர்

அளப்பருங் கருணையினால் இவ்வரிய கொடைகளைப் படைத்திருக்கும் இறைவன் இவைகளின் மத்தியில் அரிதினும் அரிதாகிய மானுடராகிய எம்மைப் படைத்து இங்கு நாம் பயன் பெறும் வகையில் வாழ வைத்திருக்கின்றான். உலகில் காணும் அனைத்து ஜீவர்களிலும் அனைத்து வஸ்துக்களிலும் இறைவன் ஒன்றாக உடனுறைகின்றான். இதனால் தான் இறைவன் கருணைவடிவானவன்; அன்பு வடிவானவன் என்பதனை நாம் உணர்ந்து கொள்கின்றோம். இறைவனின் குணந்தான் அன்பு மட்டுமன்று; இறை சொரூபமே அன்புதான் என்பதனை இறை பரம் பொருளை நன் குணர்ந்து அனுபவித்த ஞானியர் பலர் எடுத்துரைத்துள்ளனர்.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே**

என்று திருமூலர் உரை செய்ததற் கமைவாக அன்பு நிலைதான் இறைவடிவம் என்பதனை உணர்ந்தவர் அன்பு செய்யத் தலைப்படுவர்.

அன்பு என்பது பரந்து விரிந்தது. தாயன்பில் ஆரம்பிக்கும் அன்பானது சகோதரஅன்பு உற்றார் உறவினர் மீதான அன்பு, அயலவர்கள், நண்பர்கள் மீது வைக்கும் அன்பு எனப் பரந்து விரிந்து முடிவில் இறையன்பில் நிறைவு பெறுகிறது. உலகியல் அன்புடைமையினால் எம் உள்ளம் முழுமையான

நிறைவைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. உலகியல் அன்பால் நாம் கருணையுள்ளத்தைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. உலகியலில் வாழும் போது சகல ஜீவர்களிடமும் நாம் காட்டும் அன்பு நிலை எம்மிடையே ஓரளவு அமைதிக்கும் ஆனந்தத்திற்கும் வழிகாட்டுகிறது. இவ்வன்பு நிலையை இறைவழிபாட்டின் ஓர் அங்கமாக நாம் மாற்ற முடியும். எவ்வாறெனில் சகல புவனங்களையும் படைத்த அந்தப் பெரும் பரம்பொருள் அனைத்து ஜீவர்களிலும் உறைகின்றான். இதனால் நாம் உலகியல் வாழ்வில் சகல ஜீவர்களிடமும் அதாவது மனிதர் மட்டுமன்றி அனைத்துயிர்கள் மீதும் காட்டும் அன்பும் பரிவும் இறைவனைச் சென்றடைகின்றது. இது அன்புடைமையின் நனி சிறந்த வெளிப்பாடாகும்.

மற்றைய அன்பு நிலையானது இறைவன் மீது நாம் கொண்டிருக்கும் அன்பாகும். இது பக்தி எனப் பேசப்படுகிறது. மேலாம் பரம்பொருளின் கருணைத் திறனை நாம் நினைந்து நினைந்து உள்ளம் ததும்பி நன்றியுணர்வு வெளிப்போந்து எம் நிலை மறந்து அவனருளால் அவன் தாள் அடையும் நிலையே பக்தி நிலையாகும். இவ்வுலகில் எம்மை நன்றாகப் படைத்தவன், தம்மைப் பணியவும் பாடவும் பணி செய்வதற்குமே படைத்தான் என்ற நினைவு எம் உள்ளத்தில் நிலைத்திருக்க வேண்டும். இந் நினைப்பு எம் உள்ளத்தை விட்டு ஒரு போதும் நீங்காதிருக்க வேண்டும். இந்நிலையில் நாம் பரிபூரண பக்தியுடையவர்களாக மாற்றப்படுவோம். இறைவனை நாம் எமது உடமைப் பொருளாக்கிக் கொண்டோமானால் இறைவன் எம்முடனே இணைந்து கொள்வான். செல்வந்தர்களாக வேண்டின் நாம் செல்வத்தைத் தேடிச் சேர்த்துச் செல்வந்தர்களாகி விடுகிறோம். இவ்வாறே அன்பு மயமான இறைவனைத் தேடிச்சரணடைந்து நாமும் அன்பு வடிவினராக மாறிவிடுகின்றோம். இதனால் நாம் இறைத்தன்மை பெற்றவர்களாக மாற்றப்படுகின்றோம்.

இவ்வழிகளைப் பின்பற்றியமையால்தான் எமது சமயத்தின் கண் வாழ்ந்திருந்த ஞானியர், நாயன்மார்கள் பலரும் இறை நிலையைப் பெற்றார்கள். நாயன்மார்கள் தம் வாழ்வில் இறைவன் மீது கொண்டிருந்த பக்தியின் தன்மையை உற்று நோக்குவோமாயின், அவர்கள் இறைவன் மீது பரிபூரண நம்பிக்கை வைத்து அவனையே தம் வழிகாட்டியாக, தோன்றாத்துணையாகக் கருதி வழிபட்டு வந்தமை புலனாகின்றது. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்களினூடாகவும் அவர்கள் வழிபட்டமை தெளிவாகின்றது. பக்தி செய்வதற்கு நாவுக்கரசர் எம்மை ஆற்றுப்படுத்தியமையை நோக்குவோமாயின் "தலையே நீவணங்காய்" என்றார். "கண்காள் காண்மின்களோ செவிகாள் கேண்மின்களோ" என்று எமது உடலின் அங்கங்கள் ஒவ்வொன்றையும் பணிசெய்யும் பாங்கை எடுத்துரைத்தமை வியக்கத்தக்கது. மனம், வாக்கு, காயம் ஒன்றிணைந்த நிலையில் வழிபாடு செய்தார்கள். இவ்வண்ணமே அவர்கள் எல்லோரும் இறைவனைச் சரணடைந்தார்கள். இறைவனிடத்திருந்து சகல சம்பத்துக்களையும் பெற்றார்கள். இதனால் அவர்கள் அன்புடையவர்களாகச்



சமயத் தொண்டும் சமூகத் தொண்டுகளும் ஆற்றினார்கள். நாயன்மார்களின் வாழ்க்கை இவற்றையே எமக்குப் போதித்து நிற்கின்றது. இறையன்பு செய்தமையால் அவர்கள் இந்நிலையெய்தினார்கள்.

எனவே அன்புமயமான இறைவனை அடைய நாம் அன்புடையவர்களாக, பக்தி செய்பவர்களாக, பணிசெய்பவர்களாக, பணிவுள்ளவர்களாக வாழ முயன்றால் அன்புருவான இறைத்தன்மையை நாமும் அடைந்து உய்வு பெறுவோம். இவற்றைத்தான் எமது சமயம் போதித்து நிற்கின்றது. அன்புடையவர்களாக, தொண்டு செய்பவர்களாக நாம் வாழும் போது இறையருள் எம்மை வழி நடத்திச் சென்று உய்வு பெறவைக்கின்றது. இறையருளில் மூழ்கித்திளைப்பதற்கு அன்புடமையும் இறைத்தொண்டும் வழிகாட்டுவதனை நாம் எமது அனுபவத்தில் உணர்ந்து கொள்ளலாம்.

இறையன்பு செய்வதற்கு நாம் எம்மைத் தகுதியானவர்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். அதற்கான தகுதி தான் என்ன? இராமலிங்க வள்ளலார் தமது அருட்பாடலில் கூறிய அரியகருத்துக்களை நாம் உளங்கொண்டு செயற்பட வேண்டும்.

"ஒருமையுடன் நினது (இறைவனது) திருவடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும். பெருமை பெறு நினது (இறைவனது) புகழ் பேச வேண்டும். பொய்மை பேசாதிருக்க வேண்டும். பெருநெறி பிடித்தொழுக வேண்டும். மதமான பேய்பிடியாதிருக்க வேண்டும். மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும். உனை (இறைவனை) மறவாதிருக்க வரந்தரவேண்டும்"

என அருட்பெருஞ்சோதி வள்ளலாரின் சிந்தனைகளை நாம் எமதாக்கிக் கொள்வோமாயின் உண்மையின்பம் பெற்று நாம் மண்ணில் பிறந்த பயனை அடைந்தின்புறுவோம் என்பது திண்ணம்.

"அன்பே சிவம்"

## இவர்களும் அவர்களா?




வீதியால் சென்றாலும்
ஒழுங்கையால் சென்றாலும்
பொதுவாக நாம் காணும் காட்சி
தனியாக என்றால்................
முந்தி நாங்கள் அப்படியெல்லோ
நினைத்தோம்........
அவர்கள்
தனியாக புலம்புவார்கள்;
சிரிப்பார்கள்; தலையைச் சொறிவார்கள்;
ஆனால் இப்போது



அதெல்லாம்
நாகரீகமான தோற்றத்துடன்
ஹெல்மெற்றுக்குள் செல்லை வைத்து
தனியாகவே பேசிக்கொள்கிறார்கள்......
முதியவர் முதல் எல்லோருமே
முதலில் யோசிப்பது அதைத்தான்
கூர்ந்து பார்த்த பின் தான்
இவர்கள் அவர்கள் அல்லர்
என்ற நிம்மதி பெருமூச்சு!

**தவா**
*சுன்னாகம்.*

# பல்லிகள்



எனக்கு பல்லிகளைப் பிடிப்பதில்லை
ஆக்கபூர்வமாக பல்லிகள் ஏதேனும் செய்ததுண்டா
எட்டா மறைவிடத்திலிருந்து
எதிர்பாரா நேரத்தில் ச்சுச் ச்சுச் எனச்
சொல்வதைத் தவிர –
எலும்பில்லா சிற்றுயிரை உண்ணல் தவிர –
தேக்கமுறச் சிந்தை, திகைத் தொதுக்கும் நிலை
தோற்றுவித்தல் தவிர –
பத்துத் திக்கு பதினாறு திக்கென
பஞ்சாங்கப் பலன்கள் ஒரே திசைக்கு
ஒருநாளில் வேறுவேறாம்
'இன்றே செய், நன்றே செய்' என்போர்க்கு
நச்சென்று சொல்லச் சில "பல்லிகள்"
அடியுங்கள் அழியுங்கள் பல்லிகளையல்ல
முடிவிதுவே என்கின்ற பல்லிப்பலன்களை;

– பரணி –



## ஞாபகம் வருகிறதா!

01. முதலாவது சார்க் திரைப்பட விழா எப்போ நடை பெற்றது?
02. இலங்கையின் கிரிக்கெட் வரலாறு எப்போது ஆரம்பமானது?
03. திராவிட மொழியை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
04. யாழ்ப்பாணத்தில் மிகக் கூடுதலான உபபாடநூல்களை வெளியீடு செய்த நிறுவனம் எது?
05. மகாத்மா காந்தி எங்கே எப்போது சுட்டுக் கொல்லப்பட்டார்?
06. 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்ற நூலின் ஆசிரியர் யார்?
07. முதன் முதல் இடம் பெற்ற சர்வதேச கிரிக்கெட் போட்டியில் ஓவர்கள் எத்தனை எனத் தீர்மானிக்கப்பட்டது?
08. யாழ்ப்பாண்தில் வெளிவந்து கொண்டிருக்கும் உளவியல் சஞ்சிகை எது?
09. 'ஞானச்சுடர்"என்ற சஞ்சிகையின் வெளியீட்டாளர்கள் யார்?
10. "பண்பாடு" என்ற சொல்லை முதன்முதலில் தமிழுக்குக் கொண்டு வந்தவர் யார்?



# விடியலுக்காய் ....

"நற்சோணை"

வானம் வெளுத்ததனால்
வையகம் சிவந்தது
கதிரவன் விடியலுக்காய்
காத்திருந்தன உயிரிகள் எல்லாம்......

அன்று.......
ஏர்பூட்டி உழும்தோழன்
ஏற்றமுடன் வாழ்வதற்கு
கதிரவனின் விடியலுக்காய்
காத்திருந்தான் பூமிதனில்.......

ஆனால் இன்று.......
தேசத்தில் பிறந்த மனிதரெல்லாம்
தேடி அலைந்து காத்திருந்தனர்
கதிரவனின் விடியலுக்காய் மட்டுமல்ல
கண்ணுக்கு எட்டாத தூரத்தில் நிற்கும்
சமாதான விடியலுக்காய்..............

தொலைந்து போன உறவுகளும்
கலைந்து போன கனவுகளும்
கண்ணுக்கு எட்டிய தூரத்தனில்
காணாமல் போனதுவோ...........

கண்ணில் ஏக்கமுடன்
காரிருளின் மத்தியினில்
எண்ணிறைந்த கனவுகளுடன்
விடியலுக்காய்

காற்றே ஒரு கணம் நில்லாயோ?
காத்திருக்கும் எமக்கு பதில் சொல்லாயோ
கூடி வரும் மேகமது கலைந்து – எமை
நாடி ஒரு விடியலும் வாராதோ?

இப்படத்திற்குப்
பொருத்தமான கவிதைகள்
வாசகர்களிடமிருந்து
தெர்பார்க்கப்படுகின்றன.



சித்திரம்:-
சோ. ஹம்சத்வனி

# பின்னவர் அறிய வழி நம்மவர் செய்வதெப்போ

இ.கணேசராசா,
ஏழாலை மேற்கு.

உலகில் மனிதன் தோன்றி வளர்ந்த போதே கண்ட நாகரீகத்தின் உயர் நிலைதான் மொழி. இம்மொழி அறியப்பட்ட காலம் முதல் மனித வாழ்வில் மிகப் பெரிய மாறுதல்கள் தோன்றத் தொடங்கின. இதன் காரணமாகப் பலதுறைகளிலும் அறிவு விரிவடையத் தொடங்கியது. வாழ்வின் வளத்தோடு புதுப்புது விதமான கண்டு பிடிப்புக்களும் நிகழ்ந்து வரத் தொடங்கின. இந்த வளர்ச்சியோடு மனிதவாழ்வின் தன்மையைக் கொண்ட கதைகள் பாடல்கள் நாடகங்கள் எனப் பலவித இலக்கியங்கள் உருவாகின. இவற்றின் பயனால் மனித வாழ்வின் சிந்தனை விரிவடைந்து மனித இனத்திற்கு இது தான் வாழ்வு, இலட்சியம் நாகரீகம் என சுட்டிக் காட்ட ஏதுவாக அமைந்தன. எம் முன்னவர் வாழ்ந்த வாழ்வு, சிறப்பு, நாகரிகம் எனப் பல விடயங்களை நாம் அறிய மொழி எமக்கு ஊடகமாக அமைந்துள்ளது.

இன்றைய ஆய்வுகளின் படி கி.மு 5000 வருடங்களுக்கு முன்வாழ்ந்த மனிதனின் வாழ்வை அவனின் இலக்கியங்கள், கட்டிடங்கள், சிற்பங்கள் போன்றவற்றின் மூலமே நாம் அறிய முடிகின்றது. அதிலும் கட்டங்கள், சிற்பங்கள் போன்றவற்றைப் பார்த்து நாம் எமது இன்றைய கால வாழ்வின் மனோ நிலைக்கு ஏற்பக் கற்பனை செய்து கொள்ளுகின்றோம். இன்றைய சிந்தனையை அன்றைய சிந்தனை என நாம் போலியாகின்றோம். மேலும் அன்றைய இலக்கியங்கள் கூறும் கருத்துகளை வாசித்துக் கொள்ளவே முடியாமல் தடுமாறுகின்றோம். தட்டுத்தடுமாறி மொழிகளை வாசித்தாலும் அவை அக்காலத்தில் எதைக் குறித்தன என்பதை சில வேளைகளில் ஊகித்தே முடிவெடுக்க வேண்டியவர்களாய் உள்ளோம்.

ஆனால் இன்று எந்த மொழி யானாலும் புரிந்து கொள்ள மொழி பெயர்ப்புக் கருவிகள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், என பல வசதியுடன் மொழியின் உச்சரிப்பு முறை பற்றிய ஒலிப்பதிவு நாடாக்களும் போதிய விளக்கத்திற்கு இன்று துணையாக உள்ளன. ஆகையால் எம் முன்னவர் எமக்கு அளித்த செல்வங்களை எம்பின்னவர் அறியவும் அவற்றை உணரவும் நாம் மேற்கொள்ளும் வழிகள் தான் என்ன? அன்றைய நாகரீகத்திற்கும் இன்றைய நாகரீகத்திற்கும் உலக உறவுக்கும் உரிய தன்மைகளை எம் பின்னவர் அறிய நாம் செய்வதென்ன? வரிவடிவின் வேறுபாடு, ஒலிவடிவின் வித்தியாசம் எல்லாம் பின்னவர் புரிந்து கொள்ள நாம் வழி சமைக்க வேண்டாவோ?

குறுகிய உலகத்தால், பல இனக்கலப்பால், பல மொழிக் கலப்பால், எம்மிடம் ஏற்படும் நாகரீக பண்பாட்டு சிதைவுகளால், மொழிகளில் ஏற்படும் பயன்பாட்டு மாற்றத்தால் பல வகையில் வடிவங்கள் மாறுபடும். ஆகவே எதிர் காலம் புரியாது நிற்பர். எனவே அவர்கள் சரியாக, முன்னவர் எமக்களித்த செல்வங்களையும், நாம் படைத்து நிற்கும் படைப்புக்களையும் புரிந்து கொண்டு தமது வாழ்வை இலட்சிய முடைய தாக்க வழி காட்ட வேண்டியது எமது கடமையல்லவா?

பழமையும் பெருமையும் உடையது எமது இனம் என்று கூறுவது மட்டுமல்லாமல் எதிர்காலமும் பெருமைப்பட வேண்டாமா? இருக்கும் வசதிகளை நல்வழியே பயன்படுத்தி சிறப்புறு செயல்களை நிலை பெறச் செய்ய வேண்டும். வளரும் விஞ்ஞானத்தால் நின்றிடும் மின்னியக்கி கிட்டாவிடினும் இனம் எமை உணரத் தக்க வழி காண்டல் தகைவுடையோர் கடனன்றோ.நன்றே செய்வோம், அதனை இன்றே செய்வோம். ■



# சுன்னாகம் குறித்த இடப்பெயர் ஆய்வு

'நம்பி'
இறைமியல் கல்லூரி,
சுன்னாகம்.

இன்று உலகில் வாழும் மக்களின் சிந்தனை பல்நோக்குடையதாகக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சியாகும். இதன் மூலம் மக்களின் சமுதாயச் சிந்தனைகளும் அபரிமிதமானதாகக் காணப்படுகின்றன. இவைகளின் மூலம் சமுதாயத்தில் ஊறிப்போன நிலையில் கால காலமாக முன்னெடுத்து வரப்பட்ட செயற்பாடுகள் குறித்த காரண காரியத் தொடர்புகளும் பரிணாம வளர்ச்சி நிலையில் நோக்கப்படுகின்றன. இந்தியாவில் தீண்டத்தகாதவர்கள் எனக் கூறி ஏனைய மக்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட மக்கள் கூட்டத்தினரிடையே கூறப்படும் சிந்தனைகளை நோக்குமிடத்து அவைகள் எமக்கு வியப்பாகவுள்ளன. இந்தியாவின் ஆதிக்குடி வாசிகள் திராவிடர் என்பர் இம்மக்கள் பல்வேறுபட்ட காலங்களில் பின்பற்றிய சமய நம்பிக்கைகள் ஒரே மாதிரியாக அமையவில்லை. ஒரு காலகட்டத்தில் இம்மக்களால் பௌத்த மதம் பின்பற்றப்பட்டு வந்த வேளையில் போர்த்திறமைகளில் பாண்டித்தியம் பெற்ற ஆரியர் இந்தியாவினுள் ஊடுருவினர். இந்த ஆரியர் தமது இந்து மதத்தைத் திராவிடர் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்க முற்பட்டனர். திராவிடர்களின் வணக்க ஸ்தலங்களைக் கைப்பற்றி அங்குள்ள மதச்சின்னங்களை அகற்றி விட்டு ஆரியர் தமது மதச் சின்னங்களை உள்ளே வைத்தனர். இவ்வேளையில் அந்த மத வணக்க ஸ்தலங்களுடன் நெருங்கிய தொடர்படையவர்கள் இந்த உண்மைகளை வெளியே சொல்லி விடுவார்களே என்ற பயம் காரணமாக வணக்க ஸ்தலங்களினுள் செல்வதைத் தடை செய்து விட்டனர். இப்படியாகத் தான் சில மக்களை வணக்க ஸ்தலங்களினுள் செல்ல விடாமற் தடுத்தனர். ஆரியர் தான் இப்போது காணப்படும் சாதிப்பாகுபாடுகளை உருவாக்கினர். இதனை ஆராய்வது அல்ல எனது நோக்கம். இதே மாதிரியான சிந்தனைகள், விளக்கங்கள் அண்மையில் இலங்கையின் பெரும்பான்மையினரினால் சிறிது சிறிதாக முன்னெடுக்கப்பட்டு வருவதனைக் காண முடிகின்றது. எமது சுன்னாகம் குறித்த இடப்பெயர் ஆய்வு இதனடிப்படையில் எழுதப்படுகின்றது. எமது முன்னோர் வரலாறு குறித்த செய்திகளைக் குறித்து பாராமுகமாக இருந்த படியால் தான் இந்நிலை ஏற்பட்டுள்ளது. அதே விதமான தவறுகளை நாமும் விடக்கூடாது. வருங்கால சந்ததியினரை பலமுள்ளவர்களாக்க வேண்டியது எமது கையில் தான் உள்ளது. பெரும்பான்மையினருக்கு சார்பானதாகத்தான் எழுதப்பட்டுள்ள வரலாறு காணப்பட்டாலும் இவைகளைக் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத் தொன்மை வரலாறு எனும் நூலின் ஆசிரியர் சுன்னாகம் என்ற இடப்பெயர் பௌத்த மத சார்பானது என்கிறார். அது மாத்திரமல்ல இதனைக் குறித்த சில சந்தேகங்களையும் எழுப்பியுள்ளார். சிங்களச் சொல்லாகிய 'கம்' என்பதை 'கிராம' என்ற வடமொழிவடிவத்தின் வழிப்பிறந்தது எனக் கொள்வது மரபானாலும் கூட, பழந்தமிழ், எலுமொழி வடிவங்களிலிருந்து தோன்றியது எனக் கூறமுடியாது என்கிறார். 'இதனால் வட மொழியிலிருந்து வந்த 'கம' என்ற வடிவத்தைப் போல் ஏற்கனவே தமிழ் - எலு மொழிகளுக்கு பொதுவாக 'கமம்' என்ற பழந்தமிழ் வடிவம் இருந்தது என்றும் பின்னர் ஒரு காலகட்டத்தில் இதனைக் கிராமத்தின் வழிவந்த சொல் என்று விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.' என விளக்கியுள்ளார். 'அத்துடன் சுன்னாகத்தில் பௌத்த கலை மரபில் ஒன்றான அமராவதி கலைப்பாணியில் அமைந்திருந்த சிற்பங்கள் ஏனைய பௌத்த ஸ்தூபிகளின் அழிபாடுகளும்

கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்கால கட்டத்தில் வாணிப நிலையங்களில் செல்வாக்குப் பெற்ற இடமாக சுன்னாகம் விளங்கியுள்ளது' என்கிறார்.

கந்தரோடையில் கிடைத்த ஒரு பிராமிய சாசனம் என்ற தலைப்புள்ள கட்டுரையில் இன்னோரு ஆசிரியர், சுன்னாகத்திலும் பௌத்த மதத்தோடு சம்பந்தப்பட்ட வழிபாடுகள் கிடைத்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். வரலாற்று ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர்கள் திராவிடர் எனவும் இவர்களில் நாகர், இயக்கர் என்ற வகையினர் வாழ்ந்துள்ளனர் என்பதனையும் குறிப்பிடுகின்றார்கள். இம் மக்கள் ஒரு காலத்தில் பௌத்த மதத்தைப் பின்பற்றியவர்களாக ஏன் வாழ்ந்திருக்க முடியாது என்ற வினாவையும் நாம் இதனை முன் வைக்க முடியாது என்பதில் சந்தேகம் உள்ளதாகவும் கருத வேண்டியுள்ளது. இது ஒருபுறமிருக்க இதனைக் குறித்த ஆய்வுகள் பல நிலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். காலத்துக்குக் காலம் தென்னிந்திய படையெடுப்புக்களினால் பாதிக்கப்பட்ட இடமாகும் மேற்கத்திய ஆயுத படையெடுப்புக்களும் யாழ்ப்பாண பகுதிகளைப் பாதித்திருக்கின்றன. எனவே தமிழராகிய நாம் மனம் சோர்ந்து போகாமல் ஆழமான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம்.

'யாழ்ப்பாணத்து மண் வாசனை' எனும் நூலில் பின்வருமாறு விளக்கம் தரப்பட்டுள்ளது. 'சுல்' என்னும் சொல்லும் நாகம் என்னும் சொல்லும் இணைந்து சுன்னாகம் ஆகின்றது. எனவும் சுல் என்னும் சொல். சுல்லு எனவும் கூறலாம். இதன் கருத்து வெள்ளை, வெள்ளி ஆகும். நாகம் என்பதின் கருத்து மலை, கற்பாறை ஆகும். இப் பகுதியில் வெள்ளைக் கற்பாறை செறிந்து காணப்படுவதால் இப்பெயர் வந்திருக்கலாம். இதே போல சுண்ணம் சுகம் ஆகிய சொற்கள் இணையும்போது, சுன்னாகம் என வரும். சுண்ணக் கற்கள் உள்ள இடம் இவ்வாறு குறிப்பிடப்படலாம். என்கிறார்.


தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும் எனும் நூலில் ஊர்ப்பெயர்களால் கவிதைகள் உள்ளன. 170 வருடங்களுக்கு முன் வாழ்ந்த இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுன்னாக முத்துக்குமார கவிராசரின் கவிதையில் 'முடிவிலா துறை சுன்னாகத்தான் வழி...........' என்றுள்ளது. இதில் சுன்னாகம் என்பது வெள்ளிமலை எனக் கூறப்பட்டுள்ளது. இதனை விட சுன்னாகம் என்பதனை சுன்னர் எனவும் சுகம் எனவும் பிரிக்கலாம். இதன் மூலம் சுண்ணம் நீற்றும் தொழில் செய்வோர் இங்கு வாழ்ந்துள்ளனர் என்கிறார். அதாவது சுண்ணாம்பு உற்பத்தி செய்வோர் வசித்த இடம் என்கிறார்.

ஈழத்து இடப்பெயர் ஆய்வு யாழ்ப்பாண மாவட்டம் என்னும் நூலாசிரியர் யாழ்ப்பாணத்து மண்வாசனை என்னும் நூலாசிரியரின் கருத்தையே முன்வைக்கிறார். அத்துடன் கற்பாறை செறிந்து காணப்பட்டமையால் நிலவியல்பு குறித்து பண்டைத் தமிழர் இவ்விடத்து சுன்னாகம் எனப் பெயர் வழங்கியிருக்கலாம் என்பதுடன் ஒல்லாந்தர் காலத்தில் சுன்னாகம் பெருஞ் சந்தையாக விளங்கியிருக்க வேண்டும் என்பதை நாட்டார் பாடல் செய்தி அறியத்தருகிறது என்கிறார்.

சுன்னாகம் சந்தையிலே - பறங்கி
சுங்கானைப் போட்டு விட்டான்
பார்த்தெடுத்தவர்க்கு - பறங்கி
பாதிச் சுங்கான் கொடுப்பான்

இவ்வகை ஆய்வு இன்னமும் பலவழிகளில் முன்னெடுக்கப் பட வேண்டும் என்று கட்டுரையாசிரியர் கருதுகிறார். ■






புனிதமான வாழ்வு வேண்டும்
மனிதம் அங்கு வாழ வேண்டும்
மனம் நிறைந்த வாழ்வு பெற்று
மானுடம் தழைக்க வேண்டும்.

புதிய பூமி படையல் செய்யும்
தெய்வ ஜாதி மனித ஜாதி
இளைஞன் யுவதி உலக ஜோதி
உரைத்திடுவோம் புதிய சேதி.

உருளும் உலகம் ஒருநொடி
உறங்கிக் கிடந்த தில்லையே
கிழக்கில் எழும் சூரியன்
களைத்துச் சோர்ந்த தில்லையே
வீசும் காற்று தடைகள் கண்டு
வீழ்ந்து போனதில்லையே
விண்ணும் மண்ணும் இயற்கையோடு
உன்னைச் சொந்தம் தேடுதே.

எழுக எழுக இளைஞனே
எழுந்து வருக யுவதியே
பழுது வாழ்வை அழுது சுமந்து
தொழுது நீயும் மடிவதா
எழுது எழுது புதியதோர்
உலகம் காணப் பாதையை
எழுந்து நீயும் ஓடி வா
விடியல் ஒன்று காணவே


# வெள்ளாடு

எண்ணெய் இல்லா
திரிச் சுடர் சுட
ஓங்கி ஒளிர்ந்து
மடிவதைப் பார்

விட்டுப் போகும்
வினாடிப் பொழுது
விண் முட்டிக் கிடக்கும்
வாழ்க்கைச் சுமையை
வெட்டிச் சரிக்க
வேண்டுகோள்
இட்டுச் செல்கிறது.

தட்டிக்கேட்டும்
தகுதி உனக்கில்லையெனில்
வேள்வியில் வெட்டிச்சரிக்கும்
வெள்ளாடு தான்
நீ.

இலட்சுமி
புத்திரன்



"ட்ரிங்............."

"ஹலோ"

"ஹலோ, நான் விமலன் பேசிறன். கமலன்தானே?"

"ஓமோம். குட்மோர்னிங். என்ன விசேஷம்."

"நீ ஒருக்கால் உன்ரை வேலையள் முடிய இஞ்சை வாறியே?"

"அதுக்கென்ன. பின்னேரம் வாறன்"



சின்னண்ணா

# கமலனும் விமலனும்



"ஓ.கே."

*** *** ***

"விமலன்!"

"ஓ, கமலன் வா, வா. உன்னைத்தான் காத்துக்கொண்டிருக்கிறன்."

"என்ன, ஏதும் பிரச்சினையோ?.........இதென்ன வீடே மாறியிருக்குது? கேற்றடியிலை புதுப்புதுப் பூக்கன்றுகள்........."

"என்ரை வேலைதான்........"

"ஓகோ, அதுதான் ரண்டுமூண்டு நாளாய் ஒரே பிசி எண்டு சொல்லி என்னோடை கதைக்கேல்லையோ?"

"சரி, வா உள்ளுக்குப் போவம்"

"இந்தப் பூச்சாடி, பூக்கள் எல்லாம் புதுசா இருக்கே"

"நான்தான் செய்தனான்"

"அதென்ன, பள்ளிக்கூடத்திலை கைவேலைக்குச் செய்யச் சரிவருகுதில்லை எண்டு குழம்பிக்கொண்டு நிண்டனி. இப்ப என்னெண்டு சரிவந்தது?"

"என்னவோ சரிவந்திட்டுது"

"விமலன், எங்கடை மனத்துக்கேற்றபடிதான் கைகால்களும் பேர்ந்து எண்டது சரிதான். விருப்பத்தோடையும் அக்கறையோடையும் செய்தால் எல்லாம் சரிவரும்"

"என்ரை அறைக்குப் போவம் வா"

"அட! எல்லாம் நீற்றாய் அடுக்கி வைச்சிருக்குது. அழகாய் இருக்குது. அதுசரி உந்தக் கபேட் புதிசு போலை இருக்குது"

"ஓம். இப்ப ரண்டு நாளாய் நான் எல்லாத்தையும் ஒழுங்காய் அடுக்கி வைச்சிருக்கிறதைப் பாத்திட்டு நேற்று அப்பா திடீரெண்டு வாங்கிக்கொண்டு வந்து இறக்கிவிட்டார். எனக்கு வலு சந்தோஷம்"

"சந்தோஷம் உனக்கு மட்டுமல்ல. அப்பாவும் சந்தோஷத்திலைதான் வாங்கித் தந்திருக்கிறார். இப்ப இதுகளைப் பாக்க எனக்கும் சந்தோஷமாய்த்தான் இருக்குது"



"இதைப் பாத்தியே கமலன்"

"அட! உது என்ன ரைம்ரேபிள்?"

"நீ சொன்ன மாதிரி எல்லாப் பாடங்கள் படிக்கிறதுக்கும் இடையிடையிலை வீட்டு வேலை செய்யிறதுக்கும், விளையாடிறதுக்கும் நேரங்கள் ஒதுக்கியிருக்கிறன்"

"மெத்த நல்லது. ஆனால் இன்னொண்டும் இப்பவே பழகிக்கொள்ள வேணும்"

"என்ன?"

"ஒரு குறிப்பிட்ட ரைம்ரேபிள் சிஸ்டத்துக்கு அப்பிடியே மாற்றமில்லாமல் இறுக்கமாய்ப் பழகிறவை அதிலை ஒரு சின்ன மாற்றம் வந்தாலும் குழம்பிப் போவினம். அப்பிடியில்லாமல் இடைக்கிடை மாறுதல்களையும் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கவேணும்"

"ஓ, எங்கடை அப்பாவிலை உந்த வீக்னெஸ் இருக்குது. நான் அவதானிச்சிருக்கிறன். ஒரு இடத்திலை இருக்கிற பொருள் இன்னொரு இடத்திலை மாறினாலே கத்தத் தொடங்கிவிடுவார்"

"ஒழுங்கமைப்புக்களும் கட்டுப்பாடுகளும் சரிவர இருக்கவும் வேணும். இடைக்கிடை அதுகளிலை சின்னச்சின்ன மாற்றங்களையும் உண்டாக்கோணும். தற்செயலாய் வாற திடீர் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளவும் தயாராய் இருக்கவேணும். அதுசரி நான் போராடிக்கிறனாக்கும ......"

"இல்லை. இப்ப இப்பிடியான விசயங்களைக் கதைக்க விருப்பமாய் இருக்குது. நான் கொஞ்ச நாளை வீணாக்கிப்போட்டன் எண்டு நினைக்கிறன். அது இருக்கட்டும். நீ 'பொயம்' பாடமாக்கிப்போட்டியே?

"இல்லை விமலன். இன்னும் கொஞ்சம் கிடக்குது. நீ......"

"நான் பாடமாக்கிப்போட்டன், சொல்லட்டே,

Be careful lettle eyes what you see.
There is God watching you, He is always watching you.
Be careful lettle eyes what you see.

Be careful lettle ears what you hear
There is God watching you, He is always watching you.
Be careful lettle ears what you hear.

Be careful lettle mouth what you speak.
There is God watching you, He is always watching you.
Be careful lettle mouth what you speak.

Be careful lettle hands what you do.
There is God watching you, He is always watching you.
Be careful lettle hands what you do.

Be careful lettle feet where you go.
There is God watching you, He is always watching you.
Be careful lettle feet where you go.

Be careful lettle mind what you think.
There is god watching you, He is always watching you.
Be careful lettle mind what you think.

Be careful lettle heart what you feel.
There is God watching you, He is always watching you.
Be careful lettle heart what you feel.

Be careful lettle children what you do.
There is God watching you, He is always watching you.
Be careful lettle children what you do.

**இக்கவிதையின் பொருள்:**

**உனது கண்கள் எதனைப் பார்க்கின்றன என்பதில் கவனமாக இரு!**

**கடவுள் எப்போதும் உன்னை அவதானித்துக்கொண்டிருக்கிறார்.**

**அதுபோலவே உனது காதுகள் எவற்றைக் கேட்கின்றன என்பது பற்றியும் உனது வாய் எவற்றைப் பேசுகின்றது என்பது பற்றியும் உனது கைகள் எவற்றைச் செய்கின்றன என்பது பற்றியும் உனது இதயம் எவற்றை உணர்கிறது என்பது பற்றியும் உனது மனம் எவற்றைச் சிந்திக்கின்றது என்பது பற்றியும் அவதானமாக இரு. இறைவன் எந்த நேரமும் உன்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.**

"அட, நீ இப்ப என்னையே ஓவர்டேக் பண்ணீட்டாய். எனக்குப் பொறாமையாய் இல்லை. சந்தோஷமாய் இருக்குது. ஊக்கமும், அக்கறையும் இருந்தால் நாங்கள் உலகையே வெல்லலாம். இந்த அழகான ஆங்கிலக் கவிதையிலை சொன்ன கருத்து எங்கடை கவனத்திலை எப்பவும் இருக்கவேணும். நாங்கள் கடவுளிடம் இருந்தால் அவர் எப்பவும் எங்களோடை இருப்பார்."

■



# பாதீனியம் களையை அழிப்போம்

உடுவில் கமநல கேந்திர நிலைய அதிகாரப் பிரதேசத்தில் வேகமாகப் பரவி வரும் மிகத் தீங்கு விளைவிக்கும் களையாகிய பாத்தீனியத்தை உடனடியாக அழிப்போம்.

இந்தக் களை செவ்வந்திச் செடியைப் போன்றதும், வெள்ளை நிறச் சிறிய பூவைக் கொண்டதும், 2 - 2 1/2 அடி உயரம் கொண்டதும், வெள்ளை நிற மெல்லிய மயிர்களைக் கொண்டதாகவும் காணப்படும். ஒரு தாவரம் 15,000 விதைகள் வரை உற்பத்தி செய்யக்கூடியது.

**இதனால் ஏற்படும் தீமைகள்:**

- பாத்தீனின் பதார்த்தத்தை மண்ணில் சுரப்பதால் மற்றைய தாவரங்களின் வளர்ச்சி குன்றும்.
- தாவரத்தின் பூவிலுள்ள மகரந்த மணிகள் ஏனைய தாவரங்களின் கருக்கட்டல், காய்கள் உருவாக்குவதைத் தடுக்கின்றது.
- மனிதனுக்கு ஒவ்வாமை ஏற்படுத்துவதுடன் சுவாசத் தொகுதியிலும் நோய்களை ஏற்படுத்துகின்றது.
- கால் நடைகளுக்கும் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.

இப்பகுதியில் வாழும் அனைத்து மக்களும் தங்கள் தங்கள் காணிகளிலுள்ள இச்செடிகளை அழித்து விவசாய உற்பத்தியை அதிகரிப்பதுடன், மண் வளத்தையும், மனித வளத்தையும், கால் நடைகளையும் காப்பாற்றும் நோக்கத்துடன் தேசப்பற்றுடன் ஒன்றிணைந்து செயற்படுவோம்.


# வீட்டிற்கு ஒரு பசு வளர்ப்போம்

அன்பார்ந்த மக்களுக்கு ஓர் பணிவான வேண்டுகோள்!

எங்கள் மூதாதையர்கள் பரம்பரை பரம்பரையாக பசுவை வளர்த்து பெரும் பயன் அடைந்து வந்தார்கள். ஆனால் தற்பொழுது இந்த இக்கட்டான சூழ்நிலையில் பலவழிகளினால் பசுவளர்ப்பு அருகி வருகின்றது. இடப்பெயர்வுகளினாலும், மந்தைகளுக்குப் போசணைக் குறைவாலும், பராமரிப்புச் செலவு அதிகரிப்பினாலும், மாமிசத்திற்காகப் பசுக்கள் அழிக்கப்படுவதனாலும், நல்லினப்பசுக்கள் கிடைப்பதரிதாலும் பசுவளர்ப்பு இன்று அருகிவிட்டது. இந்நிலையில் மீண்டும் நாங்கள் வீட்டிற்கு ஒரு பசு வளர்க்கத் திடசங்கற்பம் எடுத்துக் கொள்வோம்.

பசு வளர்ப்பதனால் நாங்கள் பல பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம். எமது ஆரோக்கிய வாழ்வுக்குத் தேவையான சத்துணவுகளான பால், தயிர், வெண்ணெய், நெய் என்பவற்றை மிகவும் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளலாம். பசுவை வீட்டில் வளர்ப்பதினால் வீடு லக்சுமிகரமாக விளங்கும். பசுவில் அதிகாலையில்

கண்விழித்தாலே பெரும் பயன் ஏற்படும். மனதிற்கு சாந்தியும் நிம்மதியும் சந்தோசமும் ஏற்படும். வீட்டுச்சுத்தத்திற்கும் துர்நாற்றத்தை அகற்றவும் கிருமி கொல்லியாகவும் பசுவின் சாணத்தைப் பயன்படுத்தலாம். மிகுதியான சாணியையும் வீட்டுக்கழிவுப் பொருட்க ளையும் சேர்த்து கூட்டெரு தயாரித்து விவசாய நிலங்களுக்கும் பயிர்க ளுக்கும் இட்டு அதிக விளைச்சலைப் பெறலாம்.




கூட்டெரு தயாரிக்கும் முறையை விவசாயத் திணைக்களம் அறிமுகப் படுத்தியுள்ளது. இந்தக் கூட்டெருவில் பயிர்களுக்குத் தேவையான பதினாறு சுவட்டு மூலகங்களும் அடங்கி இருப்பதனால் கூட்டெரு விவசாயத்திற்கு சிறந்த பசளையாக விளங்குகிறது. இரசாயனப் பசளைகளைப் பாவிப்பதனால் விவசாய நிலங்கள் விரைவாகப் பழுதடைந்து செயலற்றுப் போய்விடுவதோடு நிலத்தடி நீரும் மாசடைந்துவிடும். இதனால் மனிதனுக்கு மாற்றமுடியாத பல நோய்கள் உண்டாகும். இத்தகைய விளைவுகள் பசுவின் சாணத்தில் செய்யப்படுகின்ற கூட்டெருவினால் உண்டாகாது. எனவே இவற்றைத் தவிர்க்க பசுவளப்பு அவசியமாகும்.


இந்துசமய ஆகம விதிமுறைகளின்படி பசுவனைக் கத்துக்குரிய தெய்வத்தன்மை பொருந்தியதாகும். பசுவில் இருந்து பெறப்படும் பஞ்சகௌவியம் சமய வழிபாட்டில் முதன்மை பெறுகிறது. உழவர்கள் தைப்பொங்கல் திருநாளைத் தங்கள் பெருநாளாகக் கொண்டாடுகின்றார்கள். அதற்கு அடுத்தநாளைத் தங்களுடன் சேர்ந்து வாழ்நாள் முழுவதும் உழைக்கின்ற பசுக்களையும் காளைகளையும் சிறப்பித்து அவற்றுக்கு நன்றிக் கடன் செலுத்து முகமாகப் பட்டிப் பொங்கலைக் கொண்டாடுகிறார்கள். பசுவினைப் பூலோகத்திலுள்ள காராம் பசுவாகப் பேணிப் பாதுகாத்து பயன் பெறுகிறார்கள்.

**ச. திருக்குமார்**
**உபதலைவர்**
**இணுவில் கிழக்கு விவசாய சம்மேளனம்**

எனவே மாமிசத்திற்காக பசுவதை செய்வது கொடிய பாவமாகும். பசுவின் ஒவ்வோர் அங்கத்திலும் ஒவ்வொரு தேவர்கள் உறைகிறார்கள். எனவே தெய்வத் தன்மை பொருந்திய பசுவை வதைத்தல் பாவமாகும். பசுவைக் கொன்று புசிப்பதால் நாம் எமது ஆன்மாவிக்குத் துரோகம் செய்கிறோம். எனவே பசு வதையை நிறுத்தி எமது சமுதாயமும் வருங்காலச் சமுதாயமும் நோய்கள் இன்றி ஆரோக்கியமாக வாழ்வதற்கும் விவசாயம் சிறந்த பயனைத் தருவதற்கும் வீட்டிற்கு ஒரு பசுவை வளர்ப்போம். "பசு வளர்ப்போம் பயன் பெறுவோம்" ■








# அழுவதா - சிரிப்பதா?

துன்பம் என்ற ஒன்று வரும் போது, ஆண் என்றாலும், பெண் என்றாலும் சரி! அழுதால் மனதிற்கு சற்று ஆறுதல் கிடைக்கும் என்று அழுகிறார்கள! ஆனாலும், ஆண்கள் அழும் போது அவனை அழவிடாமல், "நீ என்ன கோழையா? நீ ஒரு ஆண்மகன் அல்லவா? அழலாமா?" என்று கேட்டு அவனை அழவிடாமல் தடுத்து விடுகிறார்கள்! ஆனாலும், கூடுதலாக அழுபவர்கள் பெண்களாகவே இருக்கிறார்கள்! சிறு துன்பத்தைக் கூடத், தாங்கும் சக்தி பெண்களிடம் இல்லையென்றே கூற வேண்டும்! நான் கூடச் சிறுவயதில் பெரியவர்களில் ஏன் பெண்கள் மட்டும் அழுகிறார்கள்? ஆண்கள் அழுவதில்லை தானே! என்று யோசித்து இருக்கின்றேன்! அதே நேரம் பெண்கள் பெரிதாக சிரிக்கும் போது 'பெண்பிள்ளை யல்லவா நீ! சிரிக்காதே!' என்று அவளைத் தடுத்து விடுகிறார்கள். ஆண்களுக்கு அழுவதற்குத் தடை, பெண்களுக்குச் சிரிப்பதற்கு தடை என்று யோசித்து, இது தான் உலகம் என்று நினைத்திருக்கிறேன்! 'இன்பமும் துன்பமும் மனிதனின் ஒவ்வொரு செயலிலும் தங்கியிருக்கிறது!' 'கண்ணீர் வருவது ஓர் அனிச்சைச் செயலாகும்! சிரிக்கும்போது கூட சில நேரங்களில், கண்ணீர் வருவதுண்டு. சிரிக்கும் போது தசைகள் ஒன்று சேர்ந்து, கண்ணீர்ச் சுரப்பிகளைச் சுருங்கச் செய்வதால், கண்ணீர் வருகிறது! துன்பத்திலும் சரி! இன்பத்திலும் சரி! நாம் எமது உணர்ச்சிகளை வெளியே காட்ட வார்த்தை இல்லாத நேரத்தில் கண்களில் கண்ணீர் வருகின்றது!



ஆண்களிற்குச் சிரிப்பதற்குத் தடையில்லை! அவர்கள் வாய்விட்டுச் சிரிக்கிறார்கள். இதனால் அவர்கள் உடல் ஆரோக்கியமாகச் சிறப்பாக வாழ வாய்ப்பிருக்கிறது.

இந்த வகையில் ஆண்கள் கொடுத்து வைத்தவர் தான்! ஆனாலும், சில ஆண்கள் கோபம் கூடுதலாகக் கொள்வதால், அவர்கள் 'ரென்சன்' ஆகி, நோயாளியாகின்றார்கள். தமது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் நன்கு வெளிப்படுத்தக்கூடிய மூளைப்பகுதி ஆண்களை விடப் பெண்களுக்குப் பெரிதாக இருப்பதால், அவர்கள் வாய்விட்டு அழுது வருகிறார்கள். சிரிப்பதன் மூலம் மனச் சோர்வு நீங்குவதோடு, மாரடைப்பு போன்ற நோய் வரும் சந்தர்ப்பமும் குறைந்து வருகின்றது. வாய்விட்டுச் சிரிக்கும் போது உடலின் தசைகள் சுறுசுறுப்பு அடைகின்றன! இதயத்துடிப்பு சீராகின்றது! சுவாசித்தல் ஆழமாகின்றது! இதனால் பிராண வாயு மாற்றம் அதிகமாகி உடல் ஆரோக்கியம் பெறுகிறது! இதுவே உண்மையும் கூட!' ■

**ச. தனுஜினி**

நாடகம்:

# மௌனவலி

**S. அருட்குமரன்**

திரை விலகும் போது நாடக மன நிலையைப் புலப்படுத்தும் வகையில் பாடல் ஒலிக்கின்றது

"வீட்டுடன் கூரைகள் பறந்தன ஒருபால்
வேருடன் மரங்களும் பாறின ஒருபால்
தோட்டத்துப் பயிருடன் வயல் வெளி நெல்லும்
மரக்கறி மரங்களும் வெள்ளத்தோ டொருபால்
வழிபடு தலங்களும் செய் தொழில் கூடமும்
புயலொடு போன வழியறியோமே
போன எம் சொத்துக்கள் மீள என் செய்வோம்
ஆண்டவனே எம்மீது அருள் புரியாயோ............."

பாடல் - கிருகா

அப்பாடல் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் கணப்பொழுதில் மேடையில் பாத்திரங்கள் உறைநிலையில (Still Position) காணப்படுகின்றனர். இப்பாத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்திலும் வெவ்வேறு மனநிலையை புலப்படுத்தும் வகையிலும் சமூகத்தில் பிரதிநிதிகளாக அரங்கிலே விரவிக் காணப்படுவர். அக் கணத்தில் பாடல் உச்ச ஸ்தாயி அடைந்து பாடல் முடிவுறுகின்றது. அக்கணம் UDC ல் இருந்து எடுத்துச் சொல்லி (உரைஞர்) வெளிப்படுவர். அவர் தனது கூரிய பார்வையினால் சமூகத்தினை அளவு கோலிடுகிறார். அவர் ஒவ்வொரு பாத்திரத்தினையும் மிகவும் கூர்மையோடும் விசாரிப்போடும் காண்கின்றார். மற்ற உரைஞர் CDR ல் இருந்து சமூகப் பிரதிநிதிகளைக் கண்ணுறுகிறார். அவ் வேளையில் உரைஞர் I மேடையின் முன் வலது பகுதியை வந்தடைந்து நிற்கிறார் அடுத்து உரைஞர் II மேடையின் முன் இடது பகுதியை வந்தடைந்து நிற்கிறார்.

உரைஞர் 1:- இயற்கை மனிதனை நேசித்தது!
உரைஞர் 2:- மனிதன் இயற்கையை வஞ்சித்தான்!
உரைஞர் 1:- இயற்கை ஒருகணம் தன்நிலை காட்டி ஓய்ந்தது!
'இவ்வேளை அதிகாரி மேடையினுள் முன் வலது பகுதியினால் அரங்கினுள் பிரவேசிக்கின்றார். அப்போது மக்கள் அனைவரும் எழுந்து. "ஐயா வாங்கோ..... வாங்கோ......" (என அழைக்க)

அதிகாரி :- முதல்.........இருந்த இடத்தில் இருங்கோ. அப்பத்தான், உங்களுக் கெல்லாம்.....
வயோதிபர் :- சரிசரி வாங்கோ வாங்கோ பதிவு எடுக்கப் போறியளோ?

உரைஞர் 1:- பாருங்கோ பாருங்கோ வடிவாப் பாருங்கோ!
உரைஞர் 2:- என்ன? வெள்ளம் ஓடுகின்ற அழகையோ!

வயோதிபர் :- பதிவு அளக்க ஒண்டையும் காணேல மூக்குப் பேணி தரவோ?
அதிகாரி :- ஐயா எல்லாருக்கும் எல்லாம் தரலாம். முதல்ல பதிவுகளை எடுக்க விடுங்கோ....
வயோதிபர் :- (சிரித்துக் கொண்டு) சரி எடுங்கோ. எங்கள வித்து கித்து போடாமல். விட்டாச் சரி



உரைஞர் :- இழந்து இழந்து நாங்கள் இழந்தது வாழ்க்கையைத் தான்
உரைஞர் 2:- எங்களுக்குத் தேவை வாழ்க்கை

அதிகாரி: - ஒவ்வொருதரா சொல்லுங்கோ

குரல்1 :- என்ர புத்தக மெல்லாம் போட்டுது

உரைஞர் 1:- அறிவுமா? போட்டுது.

குரல் 2 :- (அதிகாரியினை தாக்கி வெள்ளத்தை எத்தி பாவனை செய்தல் . அங்குமிங்கும் உலாவுதல். அதிகாரியை பார்த்து) எனக்கு விசரோ? எனக்கு விசரே?

குரல்3 :- (அதிகாரி வரும் வரை ஏதோ பாவனையில் இருந்தவர் அதிகாரி யைக் கண்டதும் Sir என்ர Phone ம் வெள்ளத்தோட போட்டுது (எனக் குறிப்பிட்டு மேடையின் பகுதிகளினூடாக வெளியேறல்)

உரைஞர் 2:- மனிதரில் இவரும் ஒருவர்
குரல் 4 :- என்ர வீடும் போட்டுது (கையில் உள்ள காயத்தினை காட்டி) காயம் எப்பதான் மாறப் போகுதோ தெரியேல்லை

குரல் 5 :- என்ர சொத்தெல்லாம் போச்சு

உரைஞர் 1:- நம்பிக்கையுமா
(இவ்வாறு ஒவ்வொருவரது குறைகளையும் கேட்ட அதிகாரி அலுப்புடன் வெளியேற மேடையில் C.L ஐ அடையும்போது)

குரல் 6 :- ஐயா! (அதிகாரி திரும்பி வந்து)

அதிகாரி :- என்ன?

குரல் :- 'உ' காட்டெண்டா உதுக்கினால போறது. 'அ'காட்டெண்டா அதுக்கிளாலையே போறது நீங்களும் உங்கட பதிவுகளும்.....

அதிகாரி : உனக்கென்ன பிரச்சினை

குரல் VII :- பிரச்சினைதான் பிரச்சினை

அதிகாரி :- உங்கள் ஒவ்வொருதருக்கும் எல்லாம் தரலாம்

(அவர் வெளியேறல்) (அதிகாரி கமராவுடன் வருதல். அப்போது மக்கள் அனைவரும் எழுந்து) வாங்கோ வாங்கோ (எனக்கூற)

அதிகாரி :- நிண்ட மாதிரி எல்லோரும் நில்லுங்கோ முதலில் ஆவணப் படுத்துவோம் (எல்லோரும் உறை நிலையில் நிற்க பாடல் பின்ன ணியில் ஒலிக்கிறது)


வானத்தை குத்தியிழைத்தோம் - நல்ல
வழியிருக்க பாழும் குழியினுள் விழுந்தோம்
கானலை நீர் என நம்பி நடந்தோமே வெம்பி.....

(சோமசுந்தரப்புலவர்) ■

# இவையா விதித்த விதியோ?

எவரும்நோ காது திறைவாய் உதவி
இயல்பாய்வாழ் ந்தோம்நீ அறிவாய்
எவரும்எப் போதும் இருந்து களைப்பா
றநுற்சத்தி ரம்அ மைத்தோம்
தவமே புரிந்து தருமம் வளர்த்து
இரப்பார்க்கு கொடுத்த குடிநாம்
சிவனே! தடையும் செலவும் எமக்கு
இவையா விதித்த விதியோ? - 01

மனைவிட்டு மானம் கெடஊர் இழந்து
வளம்கெட்டு பேர்கெட் டுப்போனோம்
சுணை கெட்டு வேண்டி வெளிநா டுசென்று
பணம் சேர்த்தும் மகிழ்வே துகண்டோம்?
வினை கெட்டு மனம்உ டையநோய் பிடித்து
வலுகெட்டு பலர்சீர் இழந்தார்
விளை யாட்டோ உனக்கு இறைவா?
இவையா விதித்த விதியோ? - 02



பா. பாலச்சந்திரன்

## அரங்கை அறிவோம்

14. தமிழ் நவீன நாடகத்தின் தந்தை?
பம்மல் சம்பந்த முதலியார்
15. உலகின் நவீன நாடகத்தின் தந்தை என போற்றப்படுவர்?
ஹென்றி இப்ஸன்
16. அமெரிக்க அரங்கில் இயலியலின் தந்தை என அழைக்கப்படுபவர்?
டேவிட் பொலஸ்கோ
17. இந்திய நாடக மரபில் "நாடகவியல்" பற்றி குறிப்பிடும் நூல்களினையும் அதனை எழுதியவர்களினையும் தருக?
❖ நாட்டிய சாஸ்திரம் - பரதமுனிவர்
❖ தசரூபம் - தனஞ்ஜயன்
18. இந்திய பிராந்தியத்தில் முதன்மை பெறும் நாடக வடிவங்கள்
❖ கதக் - டெல்லி (வடஇந்தியா)
❖ மணிப்பூரி - மணிப்பூர்
❖ குச்சுப் புடி - தெலுங்கு
❖ யாத்திரா - வங்காளம்
❖ நௌதாங்கி - உத்தர பிரதேசம்
❖ யட்ச கானம் - கர்நாடகம்
❖ கதகளி - கேரளா
❖ தெருக்கூத்து - தமிழ்நாடு
19. கவிதையியல் எனும் நூலின் ஆசிரியர்?
அரிஸ்ரோட்டில்
20. 'ஈழத்து நாடக தலை முறையொன்றின் தாய்'என பேராசிரியர் கா. சிவத்தம்பினால் வர்ணிக்கப்படும் நாடகாசிரியர்?
குழந்தை ம. சண்முகலிங்கம்



ஜூலை 28
உலக அகதிகள் தினம்

# அப்படி ஒரு பிணைப்பு

தேனினும் இனிய
செந்தமிழ் மொழிபேசி
தீந்தமிழ்ப் பண்கொண்டு தெய்வத்தை வணங்கி
செழிப்போடு வாழ்ந்திருந்த தமிழினமே!
அகதி என்ற பதத்தோடு அப்படி என்ன பிணைப்பு
ஆண்டாண்டு காலமாய் அகதி என்ற பெயர்தாங்கி
அலைந்தலைந்து திரிகின்றாய்.
ஐம்பத்தெட்டில் முதலில் அந்த விதிக்கு ஆளானாய்
அதுவே உனக்கின்று நியதியாகி விட்டது
எண்பத்து மூன்றிலும் அதே கதிதான்
அகதி என்ற பட்டம் உனக்கு தொடர்கதையானது
அந்த நாள் தொடங்கி அகதியாகி ஓடிக்கொண்டே இருக்கிறாய்
இன்னும் உன் ஓட்டம் முடியவில்லை
உள்ளூரில் மட்டுமா வெளிநாட்டிலும் உனக்கு அகதி அந்தஸ்து
இயற்கை கூட உன்மீது இரக்கம் காட்டவில்லை
சுனாமியாக வந்து உன்னைத் துரத்தியது
சூறாவளியாக வந்து உன்னைத் துரத்தியது
வெள்ளமாக வந்து உன்னைத் தள்ளியது
எல்லாம் அகதி என்ற அவதாரமாகத்தான்
சங்கம் அமைத்து மொழி வளர்த்த தமிழினமே
இன்று உன் சங்கதியெல்லாம் அகதி என்ற அந்தஸ்திலா
இந்த ஜனமத்தில் மட்டும் நீ அகதியா
இல்லை சொர்க்கத்துக்குப் போனாலும் அங்கும் அகதியா
வேண்டாம் வேண்டாம்
அடுத்த ஜன்மத்தில் உனக்கு அகதிப் பட்டம் வேண்டாம்
அதற்காக இப்போதே ஆண்டவனிடம்
வேண்டுதல் செய்

ஏழாலை எம். இந்திராணி

# ஊன்றுகோல்....

அன்று வெள்ளிக்கிழமை. கோயிலுக்குச் சென்று ஐயா பெயரில் அர்ச்சனை செய்து கொண்டு ஓட்டமும் நடையுமாக மாரி வீட்டை நோக்கி விரைந்து கொண்டிருந்தான். வீட்டை அடைந்ததும் தொழுவத்தில் இருக்கும் பசுக் கன்றில் இருந்து நாய், பூனை ஏன்? அந்த வீட்டு எஜமானர் முத்துலிங்கம் செட்டியார் முதலாக அனைவரும் அவனை ஆவலுடன் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். யார் இந்த மாரி? சர்வமும் சக்தி மயம் என்ற மாதிரி இந்த வீட்டைப் பொறுத்தவரை சர்வமும் மாரி தான். ஐயாவின் குரலைக் கேட்டு பதைத்து ஓடி வந்தான் மாரி, ஐயா கோபமாகப பார்த்துக் கொண்டிருந்தார். "எங்கே போனாய் மாரி? உன்னை எத்தனை தடவை கூப்பிடுவது? எனக்குத் தண்ணி வேணும். கொண்டு வா" என அதடடிக் கூறினார். முத்துலிங்கம் செட்டியார். உடனே சமையலறைக்குச் சென்று விசுக்கோத்தும், தேத்தண்ணியும் கொண்டு வந்து அவரருகே உட்கார்ந்து, தேத்தண்ணியைப் பருக்கி விசுக்கோத்தையும் வாயில் வைத்தான். செட்டியாருக்கு கண்கள் கலங்கின. 'இன்றைய அவர் வாழ்க்கையின் ஊன்றுகோல் இந்த மாரி தான். அவனைக் கோபமாகப் பேசி விட்டேனே' என எண்ணி வருத்தமுற்று அவன் கையை அன்போடு பிடித்துக் கொண்டார்.

அந்தக் கைகளைக் பார்த்ததும், பல வருடங்களுக்கு முன்பு சின்னஞ்சிறிய கைகளாக இருந்தவையா இன்று? ஆம் மாரி சிறுவனில்லை. இளைஞன். அவருடைய மக்களைப் போலவே அவனும் வளர்ந்து விட்டான். நல்ல வேளை குணம் மட்டும் அன்று இருந்தது போல் மாறாமல் அப்படியே இருக்கின்றது. நினைக்கப் பெருமூச்சுப் பெரிதாக எழுந்தது. 'பழசை நினைத்தால் துன்பம் மட்டும் தான் மிஞ்சும்' என எண்ணிக் கொண்டு மாரியைப் பார்த்தார். அவன் முகம் எல்லாம் பூரிப்புடன் சந்தோசமாக இருந்தது. "என்னடா விசயம் வாயெல்லாம் பல்லாக நிற்கிறாய்?" "அது ஒன்றும் இல்லை ஐயா, சின்னையாவுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்காம். சொர்ணம் அக்கா சொன்னவ? அது தான் கோயிலுக்குப் போய் அர்ச்சனை செய்து கொண்டு வந்தனான். இந்தாங்கோ." விபூதியை நீட்டினான் மாரி. செட்டியார் அவனை வியப்போடு பார்த்தார். சின்னவன் ரவியிடம் இவன் வாங்கிய அடி கொஞ்சநெஞ்சமில்லை. அப்படியிருக்க........ மாட்டுக்குப் புல்லும், நாய்க்குச் சோறும் போட்டு விட்டு வெளித் திண்ணையில் வந்து மாரி உட்கார்ந்து கொண்டான்.

பழைய நினைவுகள் மலரும் நினைவுகளாக அவன் மனக்கண்முன் ஓடிக்கொண்டிருந்தன. ஐந்து வயதிருக்கும் அவனுடைய பெற்றோர் அவன் அழுவதையும் பொருட்படுத்தாது வேலைக்குக் கொண்டு வந்து சேர்த்து விட்டார்கள். யாழ்ப்பாணத்தின் முன்னொரு காலம், மலைநாட்டிலிருந்தும், வேறு இன சனங்களில் இருந்தும், தாழ்த்தப்பட்ட சாதிகளிலிருந்தும், பெரும் பணக்காரர் வீட்டு வேலைக்காக ஆள் வைத்திருந்த காலம். அப்போது தான் முத்துலிங்கச் செட்டியார் வீட்டுக்கும் வேலைக்காரப் பொடிப்பயலாக மாரி வந்து சேர்ந்தான். செட்டியாருக்கு நான்கு ஆண்கள். ஒரு பெண், கிட்டத்தட்ட மாரியை ஒத்த வயது தான். கூடக் குறைய வயதிருக்கும். அதிலும் ரவிக்கு- செட்டியாரின் கடைக்குட்டிக்கு- மாரியைக் கண்டாலே' ஆகாது. பெரியவராக இருந்தாலும் சரி, பிள்ளைகளாக

**இணுவையூர் ஆனந்தசக்தி**

இருந்தாலும் சரி, சிறு பிள்ளையாக மாரியை எண்ணாது மாடாய்வேலை வாங்கினார்கள். அப்போது எல்லாம், அவனுக்கு ஆத்திரமும் அழுகையும் வரும். 'ஓடி விடலாமா' எனத் தோன்றும். ஆனாலும் பயம் அம்மா ஐயா மேல் கோபமும் வெறுப்பும் ஒருங்கே



தோன்றின. அவர்களைப் பார்க்கவோ, பேசவோ கூடாது. கஸ்டமோ நஸ்டமோ இனி இந்த வீடு தான் மாரியின் உலகம். அவனுடைய அம்மா இருக்கிறாளே, அது தான் செட்டியார் மனைவி தங்கம்மா அம்மா. குணத்திலும் தங்கம் தான். அவருக்காகவே அவன் போகமாட்டான். பெற்ற பிள்ளைகள் போல் அவனையும் அரவணைத்து வளர்த்த தெய்வமவள்.

யாழ்பாணத்திலே செட்டியார் கொஞ்சம் பேர்போனவர். வசதி வாய்ப்பு, சாதித் தடிப்பு, பணத்திமிர் என, பல்வேறு பட்ட அம்சங்கம் அவருக்கும் அவர் பிள்ளைகளுக்கும் அதிகமாகவே இருந்தன. ஆரம்பத்தில் மாரிக்கு கோபமும் வெறுப்பும் இருந்தது உண்மையே. ஆனால் காலப்போக்கில் அநாதையாக, ஆதரவற்றவனாக அவன் வாழாது தங்க இடம், தின்னச் சோறு, துணிமணி கிடைத்ததை நன்றியோடு நினைத்துக் கொள்வான். சாதியில் குறைந்தவன், வேலைக்காரன் என அவனை வீட்டிற்குள் விடமாட்டினம். பின்கட்டுத் தான் அவனுக்கு வாசற்படி, அந்தக் கால நாற்சார் வீடு அல்லவா? மாலையானதும் அனைத்து வேலைகளையும் முடித்துவிட்டு தங்கம்மாவின் வருகைக்காகக் காத்திருப்பான். குழம்பு வாசம், சோறு மணம் மூக்கைத் துழைத்தாலும். கிடைப்பது என்னவோ பழைய சாதம் மட்டும் தான். பெரும்பாலும், அம்மா சோறு போட்டால் அவனுக்கும் நல்லது கிடைக்கும். ஆத்திரமும் வெறுப்பும் 'பசி வந்திட பத்தும் பறந்துவிடும்' என்பது போல் பறந்து விடும். உண்ட களை தொண்டையில் நிற்க அப்படியே சரிந்து திண்ணையில் கையைப் அனையாக்கி படுத்துத் தூங்கிவிடுவான்.

ஒவ்வொரு நாளும் இப்படியாகக் கழிந்து கொண்டிருக்க, அதிகாலையில் பால் கறக்க இவனை எழுப்புவது தங்கம் அம்மா தான். அன்று ஏனோ எழுப்ப வரவில்லை. திடீரென எல்லோரும் கதறிக் கூச்சலிட்டார்கள். பதைத்து எழுந்தான். மாரி. அவன் அம்மா இறந்து விட்டாள். சீரும் சிறப்புமாக பிள்ளையின் கொள்ளியுடன் மகராசியாய்ப் போய்விட்டாள். வீட்டின் வெளி விறாந்தை யில் யன்னல் வழியாக கண்ணில் நீர் மல்க அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தான். கீழ் சாதி, மேல் சாதி இப்படி எத்தனை வேறுபாடு மனிதருக்குள்ளே. எல்லாத்தையும் தூக்கியடித்து ஒவெனக் கதறியழ வேண்டும் போல மனம் ஓலமிட்டது. அடக்கிக் கொண்டான். அவனை அன்போடு அரவணைத்த ஒரு உயிரும் பிரிந்துவிட்டது. அவனுக்கு வெறுப்பும் எரிச்சலும் தோன்றின. பெரிய முதலாளி, பிள்ளைகள் துன்பம் மறந்து பழைய வாழ்வுக்குத் திரும்பிவிட்டனர். ஒரே கூத்தும் கும்மாளமுமாக வீடே களை கட்டடியது. எத்தனையோ நாள் வயிறு காந்த, நாக்கில் எச்சில் ஊற, வயித்தைப் பிடித்தபடி தூங்கியிருப்பான் அடியும் உதையும், ஏச்சும் பேச்சும் அன்றாடம் நிகழ்ந்தன. மாரியும் பெரியனவாகி விட்டான். முன்பு இருந்த ஆத்திரம், கோபம், போய், அன்பு பணிவு, அரவணைப்பு, முதலான பண்புகள் அவனிடம் குடிகொண்டன. செட்டியார் என்ன சொன்னாலும் அவன் பேச்சு மாறி நடப்பதில்லை. இத்தகைய குணம் செட்டியார் மனதில் மாரியின் மேல் அன்பு வளரக் காரணமாயின.

யாழ்ப்பாண சமூகத்தை ஆட்டிப் படைத்த சாதிக் கொடுமையை 80 களில் ஏற்பட்ட வெளிநாட்டு மோகமும், போராட்ட வளர்ச்சியும் மழுங்கடிக்கச் செய்தன. ஏறத்தாழ, 30 ஆண்டுகளில் பெரிய மாற்றம். பிள்ளைகளை வெளிநாட்டுக்கு விட்டுவிட்டு, பெற்றவர்கள் தனியாக வசிக்கும் நிலை யாழ்ப்பாணத்தில் ஏற்படத் தொடங்கியது. பண்பாடு, விழுமியம் என வாய் கிழியப் பேசியவர்கள், இன்று முதியோர் இல்லங்களில் தஞ்சமடையத் தொடங்கினார்கள். செட்டியாரின் பிள்ளைகளும் இதற்கு விதிவிலக்கு அல்ல. ஒருவர் பின் ஒருவராக எல்லோரும் நாட்டுப் பிரச்சனையைக் காட்டி வெளிநாடு சென்று விட்டார்கள். மாரியும், எங்காவது சென்று பிழைத்துக் கொள்ள முடிந்திருக்கும். அவன்

படிக்கவில்லை. ஆனாலும், நன்றி மறப்பது நன்றல்ல என்பது அவனுக்குத் தெரியும். வெளிநாடு சென்ற பிள்ளைகள் ஒரு தரம் கூட எட்டிப்பார்க்க வில்லை. வாரம் ஒரு நாள் ரெலிபோன் வரும். அதைக் கேட்கச் செட்டியா ருக்கு கேட்கும் சக்தியில்லை. வயது வந்து விட்டது அல்லவா? இடைத்தூதன் மாரிதான். முதுசங்களைச் சுருட்டிக்கொள்ளும் எண்ணம் தவிர தகப்பனைப் பற்றிய சிந்தனையில்லை. மனைவி, பிள்ளைகள், இனசனம் இல்லாது தனிய இருக்கும் அவரை விட்டு எப்படி மாரியால் போகமுடியும். இன்று நல்ல மனிதனாக வாழ்கின்றான் என்றால் அது இந்த இடத்தில் வளர்ந்த படியால் தான். "நான் இருக்கு மட்டும் அவரை அரவணைத்துப் பார்த்திருப்பேன்."

அனைத்து நினைவுகளும் மனக்கண்முன் மலரச் சாய்ந்து கொண்டிருந்தான் மாரி. அன்று வீட்டுக்கு வெளியே நின்றவன் இன்று பூஜை விளக்கை ஏற்றுவது முதல் செட்டியாரைக் குளிப்பாட்டி குழந்தை போல பார்ப்பது வரை எல்லாமே அவன் தான். அப்போது மாரி எங்கே போய் தொலைந்தான் என ஐயா கூறுவது அவன் காதுகளில் விழுந்தது. ஓடிப்போய் அவரருகில் என்னவென்று கேட்டு உட்கார்ந்து கொண்டான். ஐயாவுக்கு முகமேன் ஒரு மாதிரி இருக்கிறது. தட்டிப் பேசுகிறாரோ? அவனுக்கு பயம் தொண்டையில் சிக்கிக் கொண்டது. எழுந்தான் டொக்டரிடம் போக, செட்டியார் கைகள் அவனைப் பற்றிப் பிடித்தன. அவர் உடம்பு நடுங்கியது. மாரியின் உடம்பு புல்லரித்து பழைய நினைவு இருவர் மனக்கண் முன் தோன்ற இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து மௌனமாகப் பேசிக் கொண்டார்கள். "மாரி என் பக்கத்திலேயே உட்கார்ந்து கொள். எனக்கு நெஞ்சுக்க என்னவோ செய்யுது. ஒரு இடமும் போகாதே." மாரி அவரது நெஞ்சைத் தடவிவிட்டான். செட்டியார் அன்போடு பார்த்தார். நான் செத்தால் நீ தான் கொள்ளி வைக்க வேண்டும். அப்ப தான் நான் சாந்தியடைவன். இந்த வீடு உன் பெயரில் எழுதியிருக்கிறான். இல்லாவிட்டால் எல்லா சொத்தையும் வித்து அழித்ததுபோல என் பிள்ளைகள் அழித்து விடுவார்கள். இது கோயில் மாதிரி இதில் வாழும் பாக்கியம் உனக்குக் கிடைச்சிருக்கு. எந்த சாதி வேற்றுமை உன்னை இந்த வீட்டுக்குள்ள வராவிடாமல் பண்ணிச்சுதோ அதனையே உன் அன்புக்கு, அரவணைப்புக்கு காணிக்கையாகத் தருகிறேன். உயிலில் மிக விரிவாக எழுதி வைத்துவிட்டேன். இனி நீயும் என் பிள்ளைதான். நான் பெற்ற பிள்ளைகள் என்னைப் பார்க்கும் என நம்பியிருந்தேன். என் நம்பிக்கை வீணாகிவிட்டது. ஆனால் மாரி, உன்னை ஒதுக்கி வைத்தேன். நீ என்னை ஒரு குழந்தையாகப் பார்க்கிறாய். என் மனதிலிருந்த வரட்டுக் கௌரவம், பிடிவாதம், மிடுக்கு. பணத்திமிர், பிடிவாதம், மிடுக்கு, பணத்திமிர், சூரியனைக் கண்ட பனிபோல மறைந்துவிட்டது. இப்போது களங்கமில்லாப் புது மனிதன் நான். உனக்கு நானும், எனக்கு நீயும் துணை" எனக் கூறி கண்ணீர் விட்டு அழுதார். செட்டியார்.

அந்த வேளையில் அந்தோனி வாத்தியார் செட்டியார் வீட்டுக்கு வந்தார். அவர் உள்ளம் சந்தோச மிகுதியால் பூரிப்படைந்தது. மாரியும் செட்டியாரும் ஒருவரையொருவர் அணைத்து ஆறுதல் கூறி அழுவதைக் கண்டார். அவர் உள்ளம் உவகை கொண்டது. வாத்தியார் இளமைக்காலம் முதல் இந்த சமூக வேறுபாடுகளை வெறுத்த ஒரு மனுசன். பள்ளியிலும் சரி, பழகுவோர் மத்தியிலும் சரி, சமூக மாற்றங்களை ஏற்படுத்த விரும்பியவர். புன்சிரிப்புடன் எண்ண அலைகளோடு செட்டியார் அருகில் வந்து அமர்ந்தார். "என்ன இந்தப் பக்கம், கன நாள் கண்டு, இப்ப பென்சன் வருகுதோ? நலம் தானே? என செட்டியார் கேட்க" ஓமோம் நலத்துக்கு என்ன குறை, பென்சன், அதைவிட பிள்ளைகள் காசு அனுப்புது, ஆனால், உதவிக்கு தான் ஆள் இல்லை. வயதான காலத்தில் பிள்ளைகள், பேரன், பேத்தியெண்டு பக்கத்தில் இருக்க ஆசை தான். எங்க நிறைவேறுது. சலித்துக் கொண்டார். அந்தோனி வாத்தியார். "பிள்ளையள் அங்க வரச்சொல்லிக் கூப்பிடுதுகள்." அங்க ஆறு மாதம் நின்ற எனக்கெல்லோ தெரியும், அங்கத்தைய கூத்து. இங்க பச்சத்தண்ணியைக் குடிச்சிட்டு படுத்திருக்கலாம் கண்டியளோ அவ்வளவு சுகம். நீங்கள் அங்க இருங்கோ நான் இங்க இருக்கிறன் எனக் கூறி விட்டு, எனக்கு தோட்ட வேலை செய்த கனகனை தெரியும் தானே. அவன்ட மகன் சிறு பொடிப்பயலாக என்னோடு வளர்ந்தவன். அவனைத் துணைக்கு வச்சிருக்கிறன். என்ர பிள்ளைகளை வளர்த்த மாதிரி அவனையும் வளர்க்கிறேன். எனக்கும் கடைசி காலத்தில் ஒரு ஊன்றுகோல் வேணும் தானே என்றார்.

இப்ப யாழ்ப்பாண சனம் மத்தியில் ஊன்று கோல்கள் அதிகமாகி விட்டன. எல்லா வீட்டிலும் பிள்ளைகளை வெளியால அனுப்பிவிட்டு வயதான காலத்தில் எங்களைப் போல தனிய வாழுதுகள். அரைவாசி முதியோர் இல்லங்களில் தஞ்சம் புகுந்து விட்டுதுகள். விழுமியம், பண்பாடு, கௌரவம், எனக் கூறும் நாம், மாற்றங்களைத் தேடி மாறிக்கொண்டிருக்கின்றோம். செட்டியார் உம்மையே எடுத்துக் கொள்ளும். எமக்கும் உமக்கும் இந்த மாரியால் எத்தனை சண்டை வந்திருக்கு. சிறுவர் கொடுமை என, கிராமச் சேர்மனுக்கு சொல்லுவன் என வெருட்டியிருக்கிறன். இன்று உமக்கு ஊன்றுகோலாக மாரி இருக்கிறான். பெத்த பிள்ளைகள் கூட இப்படிப் பார்க்காது செட்டியார். நான் சொல்லுறது உண்மை தானே. ஓமோம் உண்மை, நூற்றுக்கு நூறு உண்மை. நாங்கள் கட்டாயம் மாற வேண்டும். எல்லோரும் மனித சாதிதானே. தேவை வரும்போது சுயநலத்துக்காக மாறும் நாம், உண்மையில் ஏன் மாறக் கூடாது? மாரியைப் போல எத்தனை ஆயிரம் மாரியிருக்கு. என்னைப்போல சுயநலத்துக்காக மாறாமல், உண்மையில் மனம் திருந்தி மாற வேண்டும் என கண்ணீர் விட்டு அழுதார் செட்டியார்.

அப்போது வாத்தியாருக்கு மாரி தேத்தண்ணி கொண்டு வந்தான். அதை வாங்கிக் குடித்து விட்டு, புறப்பட்டார் வாத்தியார். விடைபெற எழுந்த செட்டியாரை தாங்கிப்பிடித்தான் மாரி. அதைப் பார்த்த வாத்தியார் யாழ்ப்பாணத்தில் மாரியைப் போல எத்தனை ஊன்றுகோல்கள்! என மனதில் நினைத்துக் கொண்டுவிடை பெற்றார். மாரியை அன்போடு அழைத்த செட்டியார், "இனி நீ என்பிள்ளை. முன்பு நீ என்னை சார்ந்து வாழ்ந்தாய். இன்று நான் உன்னைச் சார்ந்து வாழ்கின்றேன். நீதான் என்றும் எனக்கு ஊன்றுகோல்" என்று கூறி அன்புடன் மாரியை அணைத்து முத்தமிட்டார்.

(யாவும் கற்பனை) ■

**விடைகள்.**

01. கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபம். 1999 செப்ரெம்பர் 19 – 24 ம் திகதிகளில்
02. 1822 ம் ஆண்டு
03. 3 வகை . 1. வடதிராவிடம் 2. மத்தியதிராவிடம் 3. தென்திராவிடம்.
04. வட – இலங்கை தமிழ் நூற் பதிப்பகம
05. 1948 ம் ஆண்டு ஜனவரி 30 ம் திகதி
06. இரசிகமணி கதை செந்தி நாதன்
07. நாற்பது ஓவர்கள்.
08. "நான்" என்னும் சஞ்சிகை
09. சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை
10. 1937 ல் திரு. டி. சிதம்பர நாத முதலியார்

தொகுப்பு
ஆர். ஜி. ராஜ். ஏழாலை.

# காசிவாசி செந்திநாத ஐயரின் பணிகள் - ஓர் கண்ணோட்டம்

த. சண்முகநாதன்

பகுதி 11

1902 ம் ஆண்டில் திருப்பரங்குன்றத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையினை பரங்குன்ற முருகன் ஆலய அருகாமையில் தாபித்து தமிழ், சமயம், ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலிய பாடங்களைப் போதித்து வந்தார். சிறிது காலம் செல்ல அப்பாடசாலையினை அவ்வூர்ப் பிரபுக்களிடம் ஒப்படைத்து விட்டு தம் பணியில் ஈடுபட முனைந்தார். இதன் பெறுபேறாக இராமநாதபுரம் சேதுபதிகள் குடும்பத்தின் பெரும் தனவந்தரான பாண்டித்துரைத்தேவர் அவர்களின் அழைப்பினை ஏற்று அவரது விருந்தினரானார். பாண்டித்துரை தேவரினால் அமைக்கப்பட்ட நான்காம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் மாத வெளியீடான செந்தமிழ் பத்திரிகையில் பல கட்டுரைகளை எழுதி வந்த அதேநேரம் சிவஞானபோதத்திற்கு முந்திய ஞானமிர்தம் என்ற நூலை எழுதியதுடன் வேறு சில நூல்களையும் அச்சேற்றினார். இது 1903 ல் இடம் பெற்றது.

ஐயர் அவர்களின் பணிகள் பன்முகத்தன்மைத்தன. அவை பிரசங்கம், பத்திரிகை வெளியீடு, புத்தகவெளியீடு, பத்திராதிபர், சைவசித்தாந்த ஆராய்ச்சி என விரிந்து சென்ற போதும் அவர் பணியின் உன்னத கோபுர கலசமாக அவரால் தயாரிக்கப்பட்ட சைவசித்தாந்தப் பட விளக்கம் காணப்பட்டது. சைவ சித்தாந்தம் கூறும் பற்றற்ற நிலை, உண்மைநிலை என்பன எவை என்பதனை அப்படத்தின் மூலம் விளக்கினார். இதனை மெச்சிய அறிஞர் பெருமக்கள், சைவ அன்பர்கள் ஒன்றாக இணைந்து சித்தாந்தபானு என்ற பட்டம் வழங்கி ஐயரைக் கௌரவித்தனர். இது 1904 ம் ஆண்டில் இடம் பெற்ற போது வேறொரு நிகழ்வும் ஐயர் அவர்களின் வேதாந்த சித்தாந்த அறிவுக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதப்பட்டது. அன்று சென்னை மாநகரின் பொலிஸ் நீதிமன்றத்திலே அருட் பா என்றால் என்ன மருட்பா என்றால் என்ன வழக்கு வாதத்திற்கு வந்தது. இதற்கான காரணம் திரு.நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் திருமுறைகள் பற்றி பேசும் போது அருட்பாவுக்கும் மருட்பாவுக்கும் வரைவிலக்கணம் கூறிய போது மருட்பாசபையினர் அதனை ஏற்காது வழக்குத் தொடுத்தனர். எனினும் பிள்ளை அவர்களுக்காக சாட்சி பகர்ந்த ஐயர் அவர்கள் அளித்த சாட்சியத்தை - சைவத்திருமுறைகளுடன் இணைத்து சாட்சியம் கூறினார். இதனை ஆய்வு செய்த நீதிபதி அவர்கள் திரு. நா. கதிரைவேற்பிள்ளை தரப்பு நியாயத்தை ஏற்றுத் தீர்ப்பளித்தார்.



இவ் வெற்றி ஐயர்அவர்களால் தனக்குக் கிடைத்த தெனக் கூறி ஐயரது தர்க்க ஆற்றலை மெச்சினார்.

தொடர்ந்து தமிழ் நாட்டில் வாழத் தலைப்பட்ட ஐயர் அவர்கள் புதத்க ஆராய்ச்சியிலும் புத்தக வெளியீட்டிலும் கூடிய அக்கறை காண்பித்தார். அதற்காக 1906 ம் ஆண்டு செந்திநாத ஐயர் அச்சுயந்திரசாலையினை நிறுவிப் புத்தக வெளியீடுகளை மேற்கொண்டார். இக் கால கட்டத்தில் ஐயர் அவர்கள் புறச்சமயத்தவர்களின் கண்டனங்களை சற்றும் பொறுக்க மாட்டாது தாந்திரிக துண்ட கண்டன கண்டனம், வஜ்ரடங்கம் ஆகிய நூல்களை 1910 ம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்டார். இவற்றைத் தொடர்ந்து சைவ வேதாந்தம், நீலகண்ட பாடியம், தேவாரம் வேதசாரம் முதலாம் நூல்கள் உட்பட இருபது நூல்களை ஐயர் அவர்கள் திருப்பரங்குன்றம் செந்திநாத ஐயசுவாமி அச்சகத்தில் அச்சேற்றி வெளியிட்டு வந்தகாலை 1924 ம் வருடம் வைகாசி மாதம் இரண்டாம் திகதி (15-5-1924) தனது எழுபத்தாறாம் வயதில் திருப்பரங்குன்றம் செந்திநாத ஆச்சிரமத்தில் காலமானார்.

செந்திநாத ஐயர் நாவலர் வழியினின்று சைவம் காத்த மகானாக உள்ளார். 1870 முதல் 1924 வரை ஐம்பத்து நான்கு வருடங்களை அவர் சைவம் தழைக்க, அதற்குப் பாடுபட, சைவசித்தாந்தம் வளர அதற்கு வளமூட்ட ஒதுக்கி வாழ்ந்து உயிர் நீத்த உத்தமன். புறச்சமயத்தவர்கள் சைவ நிந்தனை செய்த போது அவர்கள் நாவையடக்கப் புறச்சமய கோளரியாகச் செயற்பட்டார். ஐயர் ஆற்றிய பணிகளை நினைவு கூரும் பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் "ஆறுமுகநாவலரின் மாணவர்களுள் ஒருவரான செந்தி நாத ஐயர், டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் தமிழுக்குச் செய்த பணி போன்ற பெரும் பணியை சைவ சமயத்திற்குஞ் செய்திருக்கிறார். அவர் யாழ்ப்பாணக் கலாச்சாரத்தின் ஒரு பிரதிநிதியாக உள்ளார். என்று கூறினார். இன்னும் தமிழ் நாட்டிற்கும் நாம் பிறந்த ஈழநாட்டிற்கும் அந்த மகான் அளப்பரிய சேவை செய்துள்ளார். மாயாவாத மாருதத்தை ஆசமனம் செய்வதற்கு ஐயர் ஓர் ஆதிசேடனாகவே காட்சியளித்தார். தென் இந்தியாவில் சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படவும் ஆண்டாளம்மையார் சைவ சித்தாந்த மழை பொழிவதற்கும் ஐயர் அவர்கள் உறுதுணையாயிருந்தார். என்று பண்டிதமணி கூறுவதினின்றும் அன்னாரின் பணியின் கன பரிமாணத்தை அறியமுடிகிறது.

கட்டுரைக்குப் பயன்பட்ட நூல்கள்

1) காசிவாசி செந்திநாத ஐயர்
- குமரன் புத்தக இல்லம் 2008.
2) காசி வாசி செந்தி நாத ஐயர்
- செந்தி நாத ஐயர் ஞாபகார்த்த சபை
குப்பிளான் - 1978

# இலக்கிய வரலாறு என்னும் பயில்துறை

## ஒரு சுருக்க அறிமுகம்

ம.பா. மகாலிங்க சிவம்
ம. பா. பாலமுரளி

ஆங்கிலத்தில் History of Literature, Literary History என்னும் பெயர்களால் அழைக்கப்படும் புலமைச் செயற்பாடானது தமிழில் இலக்கிய வரலாறு என்னும் பெயரில் வழங்கப்படுகின்றது. இலக்கிய வரலாற்றுத்துறை வளர்ச்சியின் ஆரம்பகால கட்டத்தினை நோக்கினால் முதன்முதலாக இலக்கிய வரலாற்றை எழுதமுயன்ற பெருமை ஜேர்மனியைச் சேர்ந்த 'செலகல்' என்னும் பெயருடைய இரட்டையரையே சேரும். உலகப் பொது இலக்கிய வரலாறு ஒன்றினை வரலாற்றுப் பின்னணியுடன் பரந்த அளவிற் குறிப்பிடத்தக்க அழுத்தமான அறிவுடன் எழுத அவர்கள் முயன்றனர். செலகல் இரட்டையரின் பணி பலரையும் ஈர்த்தது, 19 ஆம் நூற்றாண்டு முழுவதும் மேலை நாட்டினர் செலகல் வழியே இலக்கிய வரலாறுகளை எழுத முயன்றனர்.

ஆங்கில மொழியினூடாக எம்மை வந்தடைந்த மேனாட்டுச் சிந்தனை, கல்வி என்பன புதுக்கவிதை, சிறுகதை, நாவல் முதலிய இலக்கிய வடிவங்கள் தமிழிலே அறிமுகமாக வழி வகுத்தன. அதுபோலத் தமிழுக்குப் புதிதாக அறிமுகமான இன்னொரு துறையே இலக்கிய வரலாறு என்னும் புதிய பயில்துறையாகும். 1936ல் கா. சுப்பிரமணிய பிள்ளை இலக்கிய வரலாறு என்னும் பெயரில் நூல் எழுதத் தொடங்கிய காலம் தொடக்கம் தான் இலக்கிய வரலாறு என்னும் தொடர் தமிழிலக்கிய ஆய்வாளரிடையே பெருவழக்குப் பெற்றது எனலாம்.

இலக்கிய வரலாறு பற்றி ஆராய்வதற்கு முன்னர் இலக்கியம் என்றால் என்னவென்பதை வரையறை செய்து கொள்ள வேண்டும்.

"இலக்கியம் என்பது நாம் மனிதர்களாகத் தொடர்ந்திருப்பதற்கு அன்றேல் போதுமான அளவு மனிதர்களாக இருப்பதற்கு வேண்டிய மிகமுக்கியமான உண்மைகளை அறிந்து கொள்வதற்கான, பிறிதொன்றினையிட்டு நிரப்பி விடமுடியாத ஓர் அறிவு முறை" என மேலைத்தேய அறிஞரான எல். சி. நைற்ஸ் கூறுகின்றார்.

இலக்கியம் என்பதற்கான தமிழ் நிலைப்பட்ட விளக்கத்தை,"இலக்கியம் என்னுஞ் சொல் 'லக்ஷியம்' எனும் வடமொழிச் சொல்லின் திரிபென்றும் 'லக்ஷுமி' எனுஞ் சொல் இலக்குமி என்றாகியது போல 'லக்ஷியம்' என்பது இலக்கியம் என்றாகியது என்றும் அது நோக்கம், குறிக்கோள் முதலிய பொருள்களை உடையது என்றுஞ் சிலர் கூறுவர். வேறு சிலர், இலக்கணையாற் பொருள் கொள்ளக் கிடப்பது இலக்கியம் என்றும் இலக்கணை என்பது குறிப்பென்றும் உரைப்பர். இலக்கியம், இலக்கணம் என்பன தமிழ்ச் சொற்களே என்றும் 'இலக்கு' எனும் பகுதி முதலில் இலையை உணர்த்திப் பின் எழுத்தைக் குறித்தது. என்றும் அஃதே ஆகுபெயராக நூலையும் நூற்றொகுதியையும் குறிக்கிறது என்றுங் கருதுபவரும் உளர் எனப் பண்டிதர் கா.பொ. இரத்தினம் கூறுகிறார்.

இலக்கியம் பற்றித் தெளிவு படுத்திக் கொண்ட பின்னர் இலக்கிய வரலாறு என்றால் என்ன வென்பதை ஆராய்தல் வேண்டும். இலக்கிய வரலாறு பற்றி அறிஞர்கள் பலர் தத்தம் நோக்கு நிலைப்பட்ட வரைவிலக்கணங்களை முன் வைத்துள்ளனர். இலக்கிய வரலாறு என்னும் தொடர் தமிழில் இரு வகைகளிற் பொருள்கொள்ளப்பட்டு வந்துள்ளது. ஒரு வகையினர் இலக்கிய வரலாறு என்பது இலக்கியத்தினது வரலாறு



(History of Literature) என்றும் இன்னொரு வகையினர் இலக்கியதின் வழி வரலாறு (Literary History) என்றும் கருதினார்.

இவற்றுள் இலக்கிய வரலாறு என்பது இலக்கியத்தினது வரலாறுதான் எனக் கொள்பவர்கள் இலக்கியங்களைக் குறித்த கால ஒழுங்கிலே வகைப்படுத்தி, அவற்றின் பண்புகள், பொருள் மரபுகள் என்பவற்றை வரலாற்று அடிப்படையில் கூறுவதே இலக்கிய வரலாறு எனக் கருதினர். தமிழில் இலக்கிய வரலாறு எழுதியவர்களுட் பெரும்பாலானவர்கள் இக் கருத்து நிலை உடையோராகவே இருந்தனர். பேராசிரியர் வி. செல்வநாயகம் தமது தமிழ் இலக்கிய வரலாற்று நூன்முகத்தில்,

"இலக்கியங்களைக் கால வரன்முறையை ஒட்டி ஆராயும் நூல்கள் இலக்கிய வரலாற்று நூல்கள் எனப்படும். காலத்திற்கு காலம் மாற்றமுற்றுச் செல்லும் இலக்கியப் போக்கினையும் அதற்குக் காரணமாயிருந்தவற்றையும் இலக்கிய வரலாற்று நூல் ஆங்காங்கு குறித்துச் செல்லும்" எனக்கூறுவதும்,

"ஒரு மொழியின் இலக்கிய வரலாறானது அம்மொழியிலுள்ள செவ்விய நூல்களின் தோற்றத்தையும் தன்மையையும் கால முறைக்கேற்ப வகுத்துக்காட்டி அம்மொழி பேசும் மக்களது கருத்துக்கள், இலக்கியங்களுள் எம்முறையிலமைந்துள்ளன. எனத் தெரிந்து இலக்கிய மென்பது மக்களது வாழ்க்கைப்படம் என்று தெளிவுற அறிவுறுத்தும் கருவிநூலாம் "எனக் கா. சுப்பிரமணியபிள்ளை கூறுவதும் இலக்கிய வரலாறு என்றால் இலக்கியத்தினது வரலாறுதான் என அவர்கள் கருதியமையைத் தெளிவு படுத்துகிறது.

ஆனால் இன்னொரு சாராரோ இலக்கிய வரலாறு என்பது இலக்கியத்தின் வழி வரலாறுதான் எனக் கருதினர். அதாவது இலக்கியத்தின் வழியாகக் குறித்த இலக்கியம் எழுந்த காலச் சமூக வரலாற்றை அறிந்துகொள்வதே இலக்கிய வரலாற்றின் பணியென வலியுறுத்தினர்.

"இலக்கியத்தின் வரலாறு இலக்கிய வழி வரலாறு ஆகாது. இலக்கியத்தின் வரலாறு என்பது சமூகத்தின் இலக்கியம் அதற்குரிய பண்புகளோடு வளர்ந்த முறையை எடுத்துக் கூறுவது. ஆனால் உண்மையான இலக்கிய வரலாறு என்பது ஒரு சமுதாயத்தின் வரலாற்றை அதன் அடிநாதங்கள், வெளிப்பாடுகள், தாக்கங்கள் ஆகியன கொண்டு எடுத்துக் கூறுவதாகும்", என்னும் கா. சிவத்தம்பியின் கூற்றில் இலக்கிய வழி வரலாறு பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது. இலக்கிய வரலாற்றாசிரியர் என்பவன் அரசியல் வரலாற்றாசிரியர், பொருளாதார வரலாற்றாசிரியர், பண்பாட்டு வரலாற்றாசிரியர் ஆகியோரிடையே தானும் ஒரு வரலாற்றாசிரியனாக உள்ளான். எனவே ஏனைய வரலாற்றாசிரியர்கள் எவ்வாறு தமக்குக் கிடைக்கும் கல்வெட்டுகள், செப்பேடுகள், முன்னோர் பயன்படுத்திய பாவனைப் பொருள்கள் என்பவற்றிலிருந்து வரலாற்றை அறிந்து கொள்கின்றானோ அதே போன்று இலக்கிய வரலாற்றாசிரியனும் தனக்குக் கிடைக்கும் இலக்கியங்களின் வழியாக மனிதவரலாற்றினை எடுத்துக் கூற வேண்டுமென இவர்கள் கருதினர். இவ்வகையிற பேராசிரியர் கா. சிவத்தம்பியின் தமிழில் இலக்கிய வரலாறு இலக்கியத்தின் வழியாக வரலாற்றைக் கூறும் முக்கிய முயற்சியாக அமைந்தது. ஒரு நாட்டினது அல்லது ஒரு மொழிக் கூட்டத்தினது வரலாற்றை அவர்களது இலக்கியத்தின் வழியாகப் பார்க்கும் இப் பயில்துறையை ஆங்கிலத்தில் லிற்றறி ஹிஸ்றறி (Literary History) என அழைப்பார்.

இப்பின்னணியில் ஈழத்து இலக்கிய வரலாற்றுப் பரப்பை எடுத்து நோக்கினால் 1859 இல் வெளிவந்த சைமன்காசிச் செட்டியின் Tamil Plutarch தொடக்கம் 2008 இல் வெளிவந்த முல்லை அமுதனின் இலக்கியப் பூக்கள் வரை ஏறத்தாழ முப்பது நூல்கள் வரை வெளிவந்துள்ளன. இவற்றுட் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் ஈழத்தில் தமிழிலக்கியம் தவிர்ந்த ஏனைய நூல்கள் இலக்கியத்தின் வரலாற்று நூல்களாகவே உள்ளன. எனவே ஈழத்து இலக்கிய வரலாறு எழுதுகையின் வரலாறு எனப்படும். இந்நூலும் இலக்கியத்தின் வரலாற்று நூல்கள் பற்றியதாகவே அமையும்.

# ஈழத்து இலக்கிய வரலாறு எழுதுகையின் வரலாறு

## ஈழத்து இலக்கிய வரலாற்று நூல்கள்

| நூலாசிரியர் | நூல் | ஆண்டு |
|---|---|---|
| 01. சைமன் காசிச்செட்டி, | Tamil Plutarch | 1859 |
| 02. ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை | பாவலர் சரித்திர தீபகம் | 1886 |
| 03. குமாரசுவாமிப்புலவர் . அ, | தமிழ்ப்புலவர் சரித்திரம் | 1916 |
| 04. பூபாலபிள்ளை ச. வித்துவான் | தமிழ் வரலாறு | 1920 |
| 05. முத்துத்தம்பிப்பிள்ளை . ஆ, | ஈழ மண்டலப்புலவர் சரித்திரம் | 1922 |
| 06. கணேசையர் . சி. வித்துவான் | ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம் | 1939 |
| 07. செபரத்தினம். க. | வாழையடி வாழை அரசு வெளியீடு | 1962 |
| 08. கணபதிப்பிள்ளை சி, பண்டிதமணி | இலக்கியவழி | 1964 |
| 09. கனக செந்திநாதன் | ஈழத்து இலக்கிய வளர்ச்சி | 1964 |
| 10. சதாசிவம் அ. பேராசிரியர் | ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் | 1966 |
| 11. கணபதிப்பிள்ளை மு. தென்புலோலி | ஈழநாட்டுத் தமிழ்ச்சுடர் மணிகள் | 1967 |
| 12. பூலோகசிங்கம். பொ. | தமிழிலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெரு முயற்சிகள் | 1970 |
| 13. நடராசா FXC | ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு | 1970 |
| 14. சொக்கன் | பைந்தமிழ் வளர்த்த பதின்மர் | 1972 |
| 15. சிவத்தம்பி கா, | ஈழத்தில் தமிழ் இலக்கியம் | 1978 |
| 16. மௌனகுரு சி, நு.்.மான் எம்.ஏ, சித்திரலேகா மௌனகுரு | இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் | 1979 |



| நூலாசிரியர் | நூல் | ஆண்டு |
|---|---|---|
| 17 நடராசா க. செ | ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி | 1982 |
| 18. தளையசிங்கம். மு. | ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி | 1984 |
| 19. கைலாச பதி க, | ஈழத்து இலக்கிய முன்னோடிகள் | 1986 |
| 20. குலரத்தினம் க. சி. | தமிழ் தந்த தாதாக்கள் | 1987 |
| 21. குலரத்தினம் க. சி. | செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்<br>தமிழறிஞர் சரித்திரம் (வட்டுக்கோட்டை) | 1989<br>1992 |
| 22. துரைமனோகரன் | இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி | 1997 |
| 23. தில்லைநாதன். சி. | இலங்கைத் தமிழ் இலக்கியம் | 1997 |
| 24. சண்முகத்தாஸ் அ. | இலங்கையில் பேராசிரியர்களின் தமிழியற்பணிகள் | 1998 |
| 25. சிவலிங்கராஜா. எஸ். | ஈழத்துத் தமிழ் இலக்கிச் செயல்நெறி (19ஆம் நூற்றாண்டு வரை) | 2001 |
| 26. செபரத்தினம். க | ஈழத்துத் தமிழ்ச்சான்றோர் | 2001 |
| 27. இந்து கலாசார வெளியீடு | ஈழத்து மரபுவழித் தமிழ்ப்புலமை யாளர்கள் | 2004 |
| 28. குலேந்திரன் வ. மா. | இலங்கைத்தமிழ் அறிஞர்களும் முஸ்லிம் அறிஞர்களும் | 2005 |
| 29. சிவசுப்பிரமணியம். த. | முற்போக்கு இலக்கியச் செம்மல்கள் | 2007 |
| 30. அப்புத்துரை சி. பண்டிதர் | இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு (முதலாம் பாகம்) | 2007 |
| 31. முல்லை அமுதன் | இலக்கியப்பூக்கள் | 2008 |

# உலக புத்தக தின இலக்கியவிழா



உலக புத்தக தினத்தையொட்டி சுன்னாகம் பொது நூலகத்தில் 24.04.2009இல் நடைபெற்ற இலக்கியவிழாவில் பிரதம விருந்தினராக யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி இளைப்பாறிய அதிபரும் பிரதேச மூத்த இலக்கிய கர்த்தாவுமாகிய சிவஸ்ரீ சிற்பி சரவணபவன் அவர்கள் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக பிரதேச எழுத்தாளர்களான அ. சி. உதயகுமார் (உடுவில்) அ. தம்பித்துரை (உடுவில்) கலாபூஷணம் பொ. சண்முகநாதன் (கந்தரோடை) பண்டிதை திருமதி. வை. கணேசபிள்ளை (இணுவில்) கே.எஸ். ஆனந்தன் (இணுவில்) பண்டிதர் இராமு சுப்பிரமணியம் (ஏழாலை கிழக்கு) திருமதி. சீதாலட்சுமி பரமேஸ்வரன் (ஏழாலை மேற்கு) திருமதி. எம். இந்திராணி (ஏழாலை மேற்கு) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

சுன்னாகத்தில் அமைந்து தமிழ் இலக்கிய உலகத்துக்கு பல நூல்களைப் பதிப்புச் செய்து வழங்கிவரும் சுன்னாகம் வட இலங்கைத் தமிழ்நூல் பதிப்பகம் சார்பாக பதிப்பாளர் சி. சதாசிவம் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். எழுத்தாளர் அறிமுக உரையை சு.



ஸ்ரீகுமரன் அவர்கள் வழங்கினார். யா/ மல்லாகம் மகாவித்தியாலய ஆசிரியர் சி. றமேஸ் "கலைச்செல்வி பத்திரிகையின் இலக்கியப் பங்களிப்பு" என்னும் தலைப்பில் ஆய்வுரை வழங்கினார். சிறப்பு விருந்தினர்களான எழுத்தாளர்கள் தமிழ்ச்சுடர் விருதுகள்



வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். மூத்த எழுத்தாளர் சிற்பி அவர்கள் பொன்னாடை போர்த்தப்பட்டுக் கலைஞானப்பொழில் விருது வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். வட இலங்கை தமிழ்நூல் பதிப்பக பதிப்பாளர் சி. சதாசிவம் அவர்களுக்கு பதிப்புச்சுடர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.




## ஏதாக வந்த தெதுவோ?

பா. பாலச்சந்திரன்

நால்வேத நீதி மறவோம் அறமற்
றவைபோற்றோம் உண்மை உரைப்போம்
இல்லாரை சொல்லி இகழோம் இரப்பார்க்
குஈவோம்வெ றுப்பா ரைதூற்றோம்
நல்லார்சொற் போற்றி நடப்போம் அவரை
மறவாது வாழ்த்தி பணிவோம்
சொல்லொண்ணா எம்து யரம்சூ ழவேறு
ஏதாக வந்த தெதுவோ!





# அரங்கை அறிவோம்

தொகுப்பு
எஸ்.ரி. அருள்

1. கலைப்பற்றி அறிஞர்களது கருத்து பகிர்வினைத் தருக.
- ❖ R. G. றோலிங்வூட் மனித உணர்வுகளின் வெளிப்பாடு
- ❖ அரவிந்தர் - அழகைக் கண்டு பிடித்தலும் அதனை வெளிப்படுத்தலும் கலை ஆகும்.
- ❖ பேராசிரியர் கா. சிவத்தம்பி - சமூக அழகியல் நிகழ்வு
- ❖ அன்னத சங்கரா - கலை என்பது ஒரு சாக்கு, ஒருவழி, ஊடகம்.நான் ஏதே ஒரு சாக்கில் தருவதில் என்னுடைய எண்ணத்தைத் தருகின்றேன். மற்றவர் அதைப் பெறுகின்றார். எனக்கு இன்பம் பெறுவதில். அவருக்கு இன்பம்

"இன்பம் தரவும் இன்பம் பெறவுமான சாக்கு
இருக்கிறதே அதுதான் கலை"

- ❖ கொனிக்மன் - கலை யென்பது ஓர் உணர்வினை அல்லது பெறுமானத்தினை வெளிப்படுத்துவதிலும் தொடர்புபடுத்துவதிலும் மனிதத் திறன் வெளிப்படும் முறையாகும்
- ❖ வோட்ஸ் ருவோட் - மனிதர் ஒருவன் மனிதருக்கு மனிதரது சாதாரண மொழியில் பேசுவது தான் கலை.
- ❖ கிறீ பிறிற்றெட் - மனிதனின் மானுடத்திற்கான நிவேதனமே கலை

2. நாடகத்தின் தோற்றம் பற்றி அறிஞர்களது கருத்துகளைத் தருக.
- ❖ போலச் செய்தலின் அடியாக நாடகம் தோற்றம் பெற்றது - அரிஸ்ரோட்டில்
- ❖ மதச்சடங்கினடியாக நாடகம் தோற்றம் பெற்றது - பேராசிரியர் ஜோர்ச் தொம்சன்

3. கலையின் பிரதான வகைப்பாடு?
நுண்கலை
பயன் கலை

4. நுண்கலையினை வேறு எவ்வாறு அழைப்பர்?
கவின்கலை, அழகுக்கலை, முருகியற் கலை.

5. சடங்கு பற்றி அறிஞர்களது கருத்துக்கள் சில தருக?
- ❖ எட்மன் லீச் - சடங்கானது நடைமுறைகளின் வெளிப்பாடு
- ❖ கீர்ட்ஸ் - தொன்மமும் சடங்கும் ஒன்றை ஒன்று சார்ந்து காணப்படுகின்றது.
- ❖ டைலர் - தொன்மத்தை அடியொற்றியே சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன.
- ❖ பக்தவத்சல பாரதி - சடங்குகள் சமயத்தின் கருப்பொருளாகக் காணப்படும் புனிதத் தன்மையால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பு

6. முதன்மை பெற்ற நடிப்பு முறைகள் சில தருக?
மனோரதிய நடிப்பு முறை
மிகு உணர்வு நடிப்பு முறை
முறைமை நடிப்பு முறை
குறியீட்டுவாத நடிப்பு முறை
உயிர் பொறி முறை நடிப்பு முறை



காவியப் பாணி நடிப்பு முறை
குரூர அரங்க நடிப்பு முறை
அபத்த அரங்க நடிப்பு முறை
எளிமை அரங்க நடிப்பு முறை

07. அரங்கு சார்ந்த கோட்பாடுகளும் முன்வைத்தவர்களும்
ஸ்ரனிஸ்லவஸ்கி - முறைமை கோட்பாடு
மேஜர் கோல்ட் - உயிர்ப்பொறிமுறை கோட்பாடு
பிஸ்கட்டர் - காவிய பாணியின் மூலவர்
பெடோல் ப்றெகற் - காவிய பாணியினை முன்னெடுத்தவர்
ஆர்வூட்டட் - குரூர அரங்கு
குறொட்டவஸ்கி - எளிமை அரங்கு
ஒகஸ்தாபோல் - ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு,
ரிச்சர்ட்டு செக்னர் - சுற்றுச் சூழல் அரங்கு

08. ஒதஸ்தாபோல் முன்னெடுத்த அரங்குகள் யாவை?
- ❖ கண்ணுக்கு புலனாகா அரங்கு (Invisible Theatre)
- ❖ விவாத அரங்கு (Fourm Theatre)
- ❖ படிம அரங்கு (Image Theatre)
- ❖ சட்ட மியற்றல் அரங்கு (Legistative Theatre)
- ❖ தினசரி அரங்கு (News paper Theatre)

09. ஒளியூட்டலில் அழகியல் பணியை முன்னெடுத்தவர்களில் விழுந்து போற்றப்படுவர்கள்?
- ❖ அடெல் அப்பியா (சுவிஸ்)
- ❖ கோல்டன் கிறெக் (பிரான்ஸ்)

10 ஈழத்து அரங்கு சார் நிறுவனங்கள்? நிறுவனர்கள்

| | |
|---|---|
| ❖ சரஸ்வதி விலாச சபை<br>❖ சுகிர்தா விலாச சபை<br>❖ லங்கா சுபோத சபை | - கலையரசு சொர்ணலிங்கம் |
| ❖ கலைக்கழகம்<br>❖ நடிகர் ஒன்றியம் | - நா. சுந்தரலிங்கம் |
| ❖ அவைக் காற்றுகை கலைக்கழகம் | - க. பாலேந்திரா |
| ❖ நாடக அரங்கக் கல்லூரி | - குழந்தை. ம. சண்முகலிங்கம் |
| ❖ வசந்த கான சபை | - வி.வி. வைரமுத்து |
| ❖ திருமறைக் கலா மன்றம் | - மரிய சேவிய அடிகளார் |
| ❖ அரங்க செயற்பாட்டு குழு | - க. சிதம்பரநாதன் |
| ❖ செயல் திறன் அரங்க இயக்கம் | - தே. தேவானந் |

11. ஈழத்து நவீன நாடகத்தின் தந்தை யார்?
கலையரசு சொர்ணலிங்கம்

12. ஈழத்து இயற்பண்பு யதார்த்த வாத முன்னோடி?
பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

13. தமிழ் நாடகத்தின் தந்தை என போற்றப்படுபவர்?
சங்கரதாஸ் சுவாமிகள்

இதன் தொடர்ச்சி 20ம் பக்கத்தில்...

# "மெய்ப்பாட்டியலும் மரபியலும்"

## நூல்வெளியீடு – ஒரு குறிப்பு

**15.02.2009 அன்று அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் நடைபெற்ற பண்டிதர் க. நாகலிங்கம் அவர்கள் எழுதிய செந்தமிழ் இலக்கண விளக்கம் நான்காம் பாகம் - மெய்ப்பாட்டியலும் மரபியலும் நூல் வெளியீட்டு விழாவின் போது யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் பொ.அருந்தாகரன் அவர்கள் ஆற்றிய ஆய்வுரையின் மீதான சில குறிப்புக்கள்.**

நூல் வெளியீடு நிகழ்வதற்கு முதல் வாரம். ஒரு நாள் பண்டிதர் அவர்களைச் சந்தித்த போது அவர் கூறினார்,

"ஆய்வுரைக்கு ஏன் அருந்தாகரனைப் போட்டீர்கள் என்று நண்பர்கள் சிலர் என்னைக் கேட்டனர். அவர் மேடையிலேயே புத்தகத்தைக் கிழித்தெறிந்து போடுவார் என்றுஞ் சொன்னார்கள். நான் புத்தகத்தைக் கிறிற்கலாக(Critical) விமர்சிப்பவன் என்றுந் தன்னை ஏன் போட்டீர்கள்' என்று மகளிடம் பல்கலைக்கழகத்திலே அருந்தாகரன் கேட்டிருந்தார்."

மு.பா.துவாரகன்

அவர் தொடர்ந்து கூறினார்,

"மகாஜனசபை தான் விரிவுரையாளர்கள் குமரனையும் அருந்தாகரனையும் ஆய்வுக்குத் தெரிவு செய்தது. அருந்தாகரன் இப்படியானவரென்று தெரிந்திருந்தால் கட்டாயம் அவரைத்தான் விமர்சிக்கப் போடச் சொல்லியிருப்பேன். அப்போது தான் புத்தகம் புடம் போடப்பட்டதாக இருக்கும். கேள்வி கேட்கிறபோது தானே தெளிவுபிறக்கும். அதற்குப் பதில் சொல்லும் வாய்ப்பும் ஏற்படும்."

வெளியீட்டுவிழா,



ஆய்வுரையை முதலில் நிகழ்த்திய விரிவுரையாளரான ச.குமரன் அவர்கள் மரபியலுக்கான தனது நயப்புரையை வழங்கி மெய்ப்பாட்டியலுக்கான ஆய்வை விரிவுரையாளர் அருந்தாகரனுக்கு விட்டுச் சென்றார். ஆய்வாளர்கள் இருவருமே நூல்பற்றிய ஆய்வுக்குத் தம்மைத் தகுதியற்றவர்களாத் தெரிவித்திருந்ததுடன்





நூல்பற்றிய ஆய்வினைத் தத்தமது நயப்புரைகளாகவே வழங்கியுமிருந்தனர்.

அருந்தாகரன் அவர்கள், இந்த நூலை, 1.பாடத்தைக் கற்பிப்பவன் மற்றும் மாணவர்களுடன் நூல் பற்றிய விமர்சனம் செய்பவன் என்ற வகையிலும்
2.பொதுவான வாசகன் என்ற நிலையில் நூல்பற்றிய அனுபவ உணர்வைக் கொண்டும் அணுக விரும்புவதாகக் கூறி தனது ஆய்வினை 4 விதமாக நிரைப் படுத்தியிருந்தார்.

அவர் தொடர்ந்து கூறுகின்றபோது,

மரபுவழிக் கல்விப் பாரம்பரியத்தில் பண்டிதர் நாகலிங்கம் அவர்களின் வகிபங்கு, மெய்ப்பாட்டியல் ஊடாக அவரது ஆளுமை, புலமை எவ்வாறு கட்டமைக்கப்பட்டிருக்கிறது. தொல்காப்பியத்தை அவர் எப்படி இனங்காண்கிறார். பொருளதிகாரம் பற்றிய அவரது கருத்துநிலை. மெய்ப்பாடு பற்றிய ஆசிரியரது கருத்து. மெய்ப்பாட்டை, மெய்ப்பாட்டியலை அவர் தனது மொழியில் எவ்வாறு கூறுகின்றார் அதாவது ஆசிரியரது narrative style, ஈழத்து உரையாசிரியர்களில் பண்டிதர் நாகலிங்கம் அவர்களது இடம் முதலான விடயங்களில் இந்நூலைத் தான் ஆய்வுக்கு உட்படுத்த இருப்பதாகத் தெரிவித்தார்.


ஒரு நூல் பற்றிய ஆய்விலே விமர்சகர்கள் நூலோடு தொடர்புடையதும், தொடர்பில்லாததுமான, பயனுள்ள தகவல்களை அல்லது முக்கியத்துவம் மிக்க கருத்துக்களைப் பார்வையாளர்களுடன் பகிர்ந்துகொள்வதுண்டு.

அந்தவகையிலே அருந்தாகரன்,

தொல்காப்பியத்தின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைக்கிறார். தொல்காப்பியம் என்பது ஒரு தொல் நூல். தமிழ் மொழி இலக்கணம் பற்றிக் கூறுகின்ற மிகப்பழமையான நூல். தமிழரது வாழ்க்கைமுறை பற்றிக் கூறுகின்ற ஒரு தொல் நூல் என்று கூறுகின்றார். தொல்காப்பியம் ஒரு வாழ்வியல் நூலாகவும் இருந்த போதிலும் அது ஒரு இலக்கண நூலாக, தமிழ் மொழி இலக்கண நூலாகவே அறியப்பட்டுள்ளது என்ற கருத்தை முன்வைத்து உரையாற்றினார்.(இவ்விடத்திலே அருந்தாகரன் அவர்கள் தொல்காப்பியம் பற்றி செந்தமிழ் இலக்கண விளக்கம் - மெய்ப்பாட்டியலும் மரபியலும் ஊடாகக் கூறிய விடயங்களை யான் குறிப்பெடுக்கவில்லை. சுவாரசியமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்.)
"தமிழ்மக்கள் உலகப் பொது இடத்தில், உலக சமூகத்தில் மொழியினாலேயே தமது அடையாளத்தை வெளிப்படுத்துகின்றனர்" என்ற ஆய்வாளரது கருத்து நோக்கத்தக்கது.

ஆய்வாளர்,

"இந்நூலாசிரியர் தொல்காப்பியத்தை ஒரு வாழ்வியல் நூல் என்றே வாதிடுகின்றார். தொல்காப்பியம் உலகியல் நூல் என்பதால் அது உலகியல் மகிழ்ச்சிக்குரிய விடயங்களைச் சொல்கிறது." என்று



நூலாசிரியரது கருத்தை எடுத்துக்காட்டி இது அவருடைய கருத்து என்று கூறியவர் இது பற்றிய தனது கருத்து என்ன என்பதைக் கூறவில்லை. இருப்பினும் இது அவருடைய கருத்து' என்பதனூடாகத் தனது கருத்து அதுவல்ல என்று கூறாமற் கூறினரோ?

நிற்க.

இந்நூலாசிரியரது தொல்காப்பிய ஆய்வு, அல்லது உரை விளக்கம் பற்றிய செந்தமிழ் இலக்கண விளக்கம் 3 பாகங்கள் முன்பே வெளிவந்துள்ளன. இவ்வரிசையிலே 4 ஆவதும் இறுதியுமான நூல் செந்தமிழ் இலக்கண விளக்கம் மெய்ப்பாட்டியலும் மரபியலும் ஆகும்.

இந்நூலாசிரியரது, இவ்வரிசை நூல்களின் நான்காவது பாகமாகிய மெய்ப்பாட்டியலையும் மரபியலையுங் கொண்டு நூலாசிரியரது புலமை பற்றி மதிப்பிடுவது எளிதன்று. மட்டுமன்றித் தொல்காப்பியத்தை ஆசிரியர் வாழ்வியல் நூலாகக் கருதுகின்றார் என்று ஆய்வாளர் கூறுவதும் முற்றும் உண்மையன்று.

இவ்விடத்திலே பண்டிதர் ஐயா அவர்களிடம் திருக்குறள் பற்றிய விளக்கங்களைக் கேட்கிறபோது முன்பொரு தடவை அவர் கூறியது ஞாபகத்துக்கு வருகின்றது.

"திருவள்ளுவர், ஒவ்வொரு அதிகாரத்திலும் தான் எடுத்துக் கொண்ட அதிகாரத்தின் அறத்தை அல்லது விடயத்தை மகஉயர்ந்ததாகச் சொல்லுவார்"

கொல்லாமை என்ற அதிகாரத்திலே திருவள்ளுவர்,

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.
(குறள் 323)

இதன் கருத்து:- நூலோர் தொகுத்த அறங்களுள் தன்னோடு இணையொப்பதின்றித் தானேயாக நல்லது கொல்லாமை. அ∴து ஒழிந்தால் பொய்யாமை அதன் பின்னே நிற்க நன்று,

என்று கூறிய திருவள்ளுவர் வாய்மை என்ற அதிகாரத்திலே,

பொய்யாமை பொய்யாமை ஆற்றின்
அறம்பிற செய்யாமை செய்யாமை
நன்று. (குறள் 297)

இதன் கருத்து:-ஒருவர் பொய்யாமையையே பொய்யாமையையே செய்ய வல்லனாயின் அவன் பிற அறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று என்றுங் கூறுகிறார்.

பொய்யாமையை விடச் சிறந்த அறம் வேறில்லை என்று சொன்ன வள்ளுவர், பின்னர் 323 ஆவது குறட்பாவிலே கொல்லாமையையே சிறந்த அறம் என்றும் அதன் பிறகே பொய்யாமை என்றுங் கூறுவதையும் இவ்விடத்தில் பண்டிதர் அவர்களது தொல்காப்பிய ஆய்வு குறித்த நூல்களுக்குப் பொருத்திப் பார்க்கத் தோன்றுகிறது. (இப்பகுதி கட்டுரையாளர் குறிப்பு)

மெய்ப்பாட்டியலைக் கலைக் கோட்பாட்டுக்கான ஒரு பிரதியாகவே தான் பார்ப்பதாகக் கூறுகிறார் அருந்தாகரன். ஒரு படைப்பின் அனுபவம் வாசகனிடம் தொற்றவில்லையெனின்



அதனைப் படைப்பின் தோல்வியாகக் குறிப்பிட்ட அவர் படைப்பாளியின் அனுபவத்தை இரசிகன் பெறுவதை சக இருதயநிலை என்று கூறும் சம்ஸ்கிருத சுலோகத்தை மேற்கோள் காட்டுகிறார்.

நூலாசிரியர் மெய்ப்பாடு என்பதற்கு கூறிய வரைவிலக்கணம் அதாவது அவர் கூறிய உரை தனக்கு மிகப் பிடித்திருந்ததாகக் குறிப்பிட்டு மேற்கோள் காட்டுகிறபோது,

"உள்ளத்தே நிகழும் உணர்ச்சி புறத்தார்க்குப் புலப்படுமாறு உடம்பிலே தோன்றும் நிகழ்வு" என்ற ஆசிரியரது உரை ஆய்வாளரை மிகவும் ஆகர்சித்திருந்ததை உணரமுடிந்தது. இந்நூலில் எவ்விடத்திலும் இத்தகைய வாசகனுக்கு நெருக்கமான, வாசிக்குந்தோறும் மகிழ்வளிக்கும் மொழிநடை விரவிக்கிடப்பதை பின்வருமாறு பொருள்படக் கூறுகிறார்.

ஒரு மின்சுற்றில் எவ்விடத்தில் தொட்டாலும் spark' பண்ணுவதைப் போல இந்நூலில் எங்கு எடுத்துப் பார்த்தாலும் மொழியின் உயிர்ப்பை உணரமுடிந்தாக ஆய்வாளர் தனது மொழியிற் சொன்னதையும் இங்கு நினைவிற் கொள்ள முடிகின்றது.

இந்த நூலைப்படித்த போது நல்ல ஒரு பிரதியை (நூலை) வாசித்த நிறைவைத் தந்தது என்று குறிப்பிடும் ஆய்வாளர், தொல்காப்பியத்துக்குப் பலர் உரை எழுதியிருக் கிறார்கள், மற்றவர்களுடைய உரையை வாசிக்கின்றபோது ஏற்பட்ட இடர்ப்பாடு இந்நூலைப் படிக்கின்ற போது ஏற்படவில்லை என்றுங் குறிப்பிடுகின்றார்.

மரபுமுறையான கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட ஒருவர் விஞ்ஞான பூர்வமான அணுகுமுறையில் இந்நூலை எழுதியிருப்பதை மிகச் சிறப்பானதாக வியந்து கூறியவர், இக்காலச் சந்ததியிடம் காணக் கிடைக்காத பண்பாட்டை பண்டிதர் ஐயாவிடம் காணக் கிடைக்கின்றமையை விதிர்ப்புற்றுச் சொல்கிறார். மற்றவர்களுடைய கருத்துக்களையே தாங்கள் கூறியதாகக் கூறும் இக்காலத்தில் தான் எழுதிய நூலையே தான் எழுதவில்லையெனக் கூறும் ஆசிரியரது உயர்ந்த பண்பை இக்காலச் சந்ததிக்கு மேற்கோள் காட்டுகிறார்.

நூலாசிரியர் முன்னுரையிற் கூறுகிறார்,

"திருவாசகம், திருக்கோவையார் என்னும்இருநூல்களையும் மணிவாசகர் சொல்ல இறைவனே எழுதினான் என்ற கதை பிரசித்தமானது. செந்தமிழ் இலக்கணம் என எம்மால் வெளியிடப்பட்ட நான்கு நூல்களும் ஆசிரியர் பண்டிதமணி க.சு. நவநீதகிருஷ்ணபாரதியார் கூற யான் எழுதிய தென்பதே எனது கருத்து. அவர் அமரத்துவடைந்து ஐம்பதாண்டுகளின் பின் எழுதப்பட்ட இந்நூலை அவர் சொல்ல யான் எழுதியதாகக் கூறுவது எவ்வாறு பொருத்தமாகும் என்று சிலர் யோசிக்கலாம். அவர் மறைந்த பின்னரே இந்நூல்கள் எழுதப்பட்டாலும் அவர் தந்த அருட்கொடையாகிய தொல்காப்பியக் கல்வி என்னுள்ளத்தில் நின்று என்னை ஊக்கி வழிநடத்தியதாலேயே இந்நூல்களை யான் எழுத முடிந்தது என்னும் பேருண்மையை எவரும் மறத்தலாகாது"1 என்று நவநீதகிருஷ்ண பாரதியாரே எழுதியதாகக் கூறும் நூலாசிரியர், "எனது நூல்களை அவருக்கே சமர்ப்பணமாக்கிக் களிப்பெய்துகிறேன்." என்றுங் கூறும் செவ்விய பண்பினை இக்காலச் சமூதாயம் கற்றுக் கொள்ள வேண்டும். உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற பொருள்பட ஆய்வாளர் வேண்டிநின்றார்.

தனது நூலை நவநீதகிருஷ்ணபாரதியார் எழுதியதாகக் கூறியதுடன் அவருக்கே சமர்ப்பணமாக்கிய நூலாசிரியரது தன்மையைப் பின்வருமாறு சிலாகிக்கின்றார் அருந்தாகரன்: பாரம்பரிய மரபுவழிக்கல்வியை இதன் மூலமாக நன்றியுணர்வுடன் எதிர்காலச்சந்ததிக்கு கையளிக்கின்ற உயர்ந்த விழுமியத்தைக் காணமுடிகின்றது என்று.

நூலாசிரியரது மேற்கூறிய விழுமியத்தை தனக்குப் மிகப் பிடித்தமான ஒன்றாக ஆய்வாளர் தெரிவித்தது இங்கு விதந்து குறிப்பிடத்தக்கதே.

இதனை இன்னும் ஒரு படி மேலே சென்று குறிப்பிடும் அருந்தாகரன், தான் எழுதிய பிரதியையே தான் எழுதவில்லை என்று சொல்லுகின்ற பின்நவீனத்துவ சிந்தனைமுறையைப் பாரம்பரிய மரபுவழிக் கல்விகற்ற இவரிடத்திலே காண்கின்றேன் என்று கூறி அதிசயிக்கின்றார்.

காலஞ் சென்ற பண்டிதர் சச்சிதானந்தன் ஐயாவை இம்மண்ணிலே நடந்த, தன் பாதங்களைப்பதித்த அருகிவரும் ஒருவராகக் குறிப்பிட்ட அருந்தாகரன் பண்டிதர் நாகலிங்கம் ஐயாவை இவ்வரிசையிலே ஒருவராகக் காண்கின்றார்.

வடமொழியிலே உள்ள கலைக்கோட்பாட்டை ஒத்த ஒரு கலைக்கோட்பாட்டை, அதாவது தமிழுக்கான கலைக் கோட்பாட்டை பாரம்பரியமான எங்களுடைய அறிவைத் தொகுத்து உருவாக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்துப் பேசுகின்ற போது மெய்ப்பாட்டியலும் மரபியலும் என்கின்ற இந் நூலை எமக்கான கலைக் கோட்பாட்டை உருவாக்குவதற்கான திறவுகோலாக ஆய்வாளர் கருதியதை அவரது உரையின் சாரம் வெளிப்படுத்தி நின்றது.

மேலும்,

மெய்ப்பாட்டியலும் மரபியலும் என்ற இந்த நூலினை காலங்காலமாகச் சேகரிக்கப்பட்ட அறிவின் தொகுப்பு என்றும் எடுத்துச் சொல்லும் முறையால் விளங்கத்தக்க முறையில் அமைந்திருக்கிறது என்றும் மற்றவர்களுடைய உரையைப்படிக்கிற போது இடர்ப்பாடுகள் ஏற்பட்டதாகவும் இவரது உரையைப் படிக்கிற போது இலகுவாக நகரமுடிந்தது என்றும் நயந்து பாராட்டுகின்றபோது, வாசகனை உடனழைத்துச் செல்கின்ற முறைமை, ஆராய்ச்சி மனோபாவம், நவீன ஆய்வாளனுக்குரிய பண்பு, இலக்கணங்களை இலக்கியங்களுடாக நகர்த்திச் செல்லும் அழகு முதலானவற்றை வரிசைப்படுத்தி மரபுவழித் தமிழ்க்கல்விப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியை எதிர்காலச் சந்ததிக்கு விட்டுச் செல்லும் இந்நூலின் விலைமதிப்பிலாக் கொடையாந் தன்மையைப் பார்வையாளரிடமும் மனங்கொள்ள வைக்கின்றார் அருந்தாகரன்.

நூலாசிரியர் நூலிலே எடுத்துக்காட்டியிருக்கின்ற கவிதைகளைத் தனியாக எடுத்துத் தொகுப்பின் நல்ல ஒரு கவிதைத் தொகுப்புக் கிடைக்கும் என்றவாறு தன் ஆய்வை நகர்த்திச் செல்கின்றார்

குறிப்பு

1.இங்கு கட்டுரையிலே ' என அடையாளமிடப்பட்ட பகுதி நூலாசிரியரது செந்தமிழ் இலக்கண விளக்கம் 4 ஆம் பாகத்தில் நூலாசிரியர் உரை என்ற முன்னுரையில் இருந்து எடுக்கப்பெற்றது. இச்சிறுபகுதியை வாசிக்கின்ற போது வாசகனை உடனழைத்துச் செல்லும் பாங்கினை, சொல்ல வந்த கருத்தை மிக ஆணித்தரமாகக் கூறும் மொழியின் மீதான ஆசிரியர் அவர்களது ஆளுமையை, வாசிக்குந் தோறும் இன்பம் பயக்கும் மொழிநடையின் இனிமையைக் கண்டு கொள்ளலாம். அதிலே "செந்தமிழ் இலக்கண விளக்கம் என எம்மால் எழுதப்பட்ட" என்ற தொடரைக் கவனிக்கிறபோது எம்மால்' என்று பன்மையிலே பொதுமைப்படுத்திச் சொல்லும் விழுமியத்தையுங் கண்டு கொள்க.

(கட்டுரையாசிரியர்)



# பன்னுதமிழ்
# சொன்னமன்னாகத்தான்
# சுன்னாகப் பண்டிதர் முருகேசன்

## நீதி நூறு

சி. ரமேஷ்

உலகின் கண்ணுள்ள உயரிய பண்பினையும் உயரிய செயலினையும் எல்லோரும் தெரிந்து உய்துணரும் பொருட்டு உருவாக்கப்பட்ட இலக்கியங்களே நீதி இலக்கியங்கள் ஆகும். நியமம் தவறா ஒழுங்குக்கு இயைபாக மக்கள் இயங்கும் பொருட்டு இன்னவை செய்தற்கு உரியன. இன்னவை தவிர்த்தற்கு உரியன எனக்கூறி அகமல்லா புறத்தின் பாற்பட்டு நிற்கும் இவ்விலக்கியங்கள் மாசற்ற இயல்புடைய அறத்தை வலியுறுத்தி நிற்கின்றன. இதனால் ஆன்றோரால் அற இலக்கியமென அழைக்கப்பட்ட இவ்விலக்கியங்கள் சமண சமயத்தின் செல்வாக்கு தமிழகத்தில் பெருகிய காலத்தில் நீதி இலக்கியங்கள் என்னும் சொல்லாட்சிக்கூடாக அறியப்பட்டன. அறிவிலும் அனுபவத்திலும் திட்பமாகவும் நுட்பமாகவும் ஆன்றோர் கண்ட உண்மைகளை கற்போர் மனதில் பதியுமாறு கதைகளுக்கூடாகவும் கொள்கைகளுக் கூடாகவும் காண்பரிய உவமைகள், தத்துவங்களுக்கூடாகவும் எடுத்தியம்பும் இவ்விலக்கியங்கள் நுண்மையும், சுருக்கமும் ஒளியுடைமையும் மென்மையும் விளங்க தோன்றி நிற்பவையாகும். கூரிய சொல்லாற்றல் கொண்டும் கருத்துச் செறிவுடைய நிறைகொள் பொருளாற்றல் மிக்கதாக அமையும். நீதி இலக்கியங்கள் சங்ககாலம் தொட்டு இற்றைவரை தமிழர் வாழ்வியலுடன் ஒன்றறக் கலந்து மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழச் செய்கின்றன.

மரபு வழிக்கல்வி, நிறுவன ரீதியான கல்வி என இரண்டு வகையான தமிழ்க்கல்வி மரபு நிலவிய காலப்பகுதியாக 19ம் நூற்றாண்டு கருதப்படுகிறது. பண்டைக்காலத்தில் நிலவி வந்த தமிழர்களின் கல்வி மரபுடன் இயைவுபட்ட மரபுவழிக்கல்வியில மாத்திரமன்றி நிறுவன ரீதியான கல்வி நிறுவனங்களிலும் ஆத்திசூடி, நன்னெறி, கொன்றைவேந்தன், நல்வழி, வாக்குண்டாம், திருக்குறள் நாலடியார், நீதிநெறி விளக்கம் முதலான நூல்கள் போதிக்கப்பட்டன.

மனிதவாழ்வியலானது அறத்தின் பாற்பட்டே அமைய வேண்டும் என்னும் நோக்கிற்கு அமையப் போதிக்கப்பட்ட இவ்விலக்கியங்களைப் போலவே அன்னியர் ஆட்சியின் கீழ் சிதைவுற்ற சமூகத்தைச் சீர்படுத்தவும் மனித விழுமியங்களைப் பேணி மேதகு சமூகத்தை உருவாக்கும் முகமாக இதற்கு ஒப்பான வகையில் நீதி இலக்கியங்கள் பல இக்காலத்தில் தோன்றத் தொடங்கின. அவ்வகையில் இக்காலப்பகுதியில் தோன்றிய இலக்கியங்களாக நடேச சாஸ்திரியின் சபாப் நீதிக்கதைகள், அ. சதாசிவம் பிள்ளையின் நன்னெறி கதாசங்கிரகம், இராமசாமிப் பிள்ளையின் நீதி சார வாக்கியம், அருந்த கிருட்டின ஐயங்காரின் நீதி வெண்பா நாற்பது, இராமபாரதியின் ஆத்திசூடி வெண்பா, அ. குமாரசுவாமிப்புலவரின் சாணக்கிய நீதி வெண்பா, நீதி நெறி விளக்கப் புத்துரை, அருணாசலம்பிள்ளையின் நன்னெறி வெண்பா, ச.மு. கந்தசாமிப்பிள்ளையின் சோலை மருத்தல், தண்டபாணி சுவாமிகளின் சத்தியசூத்திரம், சத்தியவாசகம், சேனாவைப்பியின் சுவர்க்கநீதி, அப்துல்காதிர் புலவரின் சொர்க்கநீதி உலகநாத முதலியாரின் நன்னீதி, சதாசிவம்பிள்ளையின் நன்னெறிக்கொத்து, பிலிப்பின் நன்னெறி விளக்கு, போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம். இவ்வகையில் இக் காலப்பகுதியில் "நன்றே செய்ய வேண்டும் அதனை இன்றே இன்னே செய்ய வேண்டும்" என்னும் ஆன்றோர் வாக்கிற்கமைய நன்னூறாத தோன்றிய நன்னூலே முருகேசபண்டிதரின் நீதி நூறாகும்.

நீதி என்னும் வடமொழிச்சொல் ஆறாம் நூற்றாண்டளவில் தமிழ்மொழியில் கலந்து தனித்துவமுடைய தமிழ்ச்சொற் போலவே தமிழிலக்கியத்தில் பயின்று வருகிறது. நீ என்னும் வேர்ச்சொல்லடியாக தோன்றும் இச்சொல் பல் பொருட் பரிமாணங்ளையுடையது. நீ என்னும் வேர்ச்சொல்லிற்கு அழைத்துச்செல் கொண்டு செல், நடத்து, வழிகாட்டு என்னும் பல்வேறு பொருட்கள் வடமொழியில் வழங்கி வருகிறது. இவ்வேர்ச்சொல்லடியாக அமையும். "நீதி என்னும் சொல் இயக்குதல், வழிகாட்டுதல், செயலாட்சி, நடத்தை, தகுதி, மரபொழுங்கு, என பல் பொருள்களை உணர்த்துகிறது" என்பார் க.த திருநாவுக்கரசு. இஃதன்றி இச்சொல் "செயலின் நிகழ்நிலை, கொள்கை முறை, முன்னுணர்மதி, அரசியல் அறிவுத்திறன், அரசியல் சூழ்ச்சித்திறன்" என்னும் பதங்களையும் தன்னுள் கொண்டு ஒரு சொல் பல்பொருட் கிளவியாக நிற்கிறது. பரிமேழழகரின் கருத்துப்படி "நீதி" என்னும் சொல் "நயன்" என்னும் சொல்கொண்டே திருக்குறளினால் அறியப்படுகிறது. (குறள் 97)

ஆசிரிய வணக்கம், அவையடக்கம் நூல் செய்த காலம் என்னும் பகுதிகள் நீங்கலாக நூறு வெண்பாக்களால் ஆன நீதி நூறு, சிந்தைக்கினிய அறவொழுக் கங்களைக் கண்டோர் பொருளுணர்ந்து செவிநுகரும் வண்ணம் சிறப்புமிக்கதோர் இலக்கியமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

அறிவால் வளர்த்த சங்கரப்பண்டிதரையும் அன்பு நிலைநாட்டிக் கலைதெருட்டி மெய்யறிவு போதித்த சிவசம்புப் புலவரையும் போற்றி விதந்துரைக்கும் ஆசிரியர் வணக்கச் செய்யுளிரண்டும் நேரிசை வெண்பாவால் பாடப்பட்டன.

அவையை அடக்கும் முகமாகவும் அதேசமயம் அவைக்கு அடங்கும் முகமாகவும் அமையும் முருகேச பண்டிதரின் அவையடக்கச் செய்யுள் அகங்காரமற்ற அவரின் மெய்யறிவை உலகுக்கு புடம் போட்டுக் காட்டுகிறது. "தாழ்ந்தேன் சொல் நூலிதனைத் தள்ளாமல்" எனக் கூறி அவைக்கு அடங்கும் முருகேச பண்டிதர் "தாழ்ந்த குருவிந்த மென்னினுங் கொள்ளுவார் கொண்டால் ஒரு நிந்தையில்லை உலகு" எனக்கூறி அடக்கமாக அவையை அடக்குகிறார்.

குடந்தை மாநகரின் கண் யாழ்ப்பாணச் சுன்னை நகர் முருகேசபண்டிதனால் 1887இல் இந்நூல் நூறுபாக்களால் ஆக்கப்பட்டதை

**"செய்யசக னாண்டுதிகழ் பதினெண் ணூற்றேழில்**
**வையம்புகழ் குடந்தை மாநகரில் - துய்யதொரு**
**யாழ்ப்பாணச் சுன்னை நகரெய்து முருகேசனியான்**
**நூற் பாடினேனீதி நூறு"**

இச் செய்யுள் விளக்கி நிற்கிறது.

சைவ சித்தாந்தக் கருத்துக்கள் உட்கிடையாக நீதி நூறு நூலில் ஆங்காங்கே வெளிப்படுகின்றன. "எழுத்துப் பலவகர மெய்தினாற் போல வழுத்து மொருதனைப் பன்மார்க்க விழுத்தகையர் கொண்டிறைஞ்ச நிற்பான்." (நீ நூறு 1) என்னும் முருகேச பண்டிதரின் செய்யுளடி அகர உயிர் போல் அறிவாகி எங்கும், நிகரில் இறை நிற்கும் நிறைந்தது. என்னும் திருவருட்பயன் பாடலின் சாரமாக விளங்குகிறது. உன்னத நிலையாகிய சிவசாயுச்சிய நிலையில் பற்றறுத்த ஆன்மா பேரின்ப வெள்ளமாகிய வீடுபேறு வேண்டி இறை அடியை பற்ற அவ்வான்மாவுக்கு முக்தியாகிய வீடு பேற்றை இறைவன் வழங்குவான். என்பதை

**"விழுத்தகையர் - கொண்டிறைஞ்ச நிற்பான் குலவு திருப்பாதங்**
**கண்டிறைஞ்சி னாகுங் கதி"**

என்னும் பாடலடி விளக்கி நிற்கிறது. பக்தி நெறி அறிவித்த சித்தம்பலவனையன்றி பிறறறியா முக்தியாகிய ஞான நெறியை"வேதத் துறையறிந்த வித்தகருங் கண்டறியா நீதிக்கு னின்ற நெறியென்பா" (நீ.நூ.2) என முருகேச பண்டிதர் போற்றுகிறார். "அலகுச் சோதியன்" என சேக்கிழாராலும் "சோதினவன்" என அப்பராலும் "மாசற்ற சோதிமலர்ந்த மலர்ச்சுடரே" என மாணிக்கவாசகராலும் "ஒளிகொள் மேனியுடையாய்" என திருஞான சம்பந்தராலும் போற்றப்படும் இறைவனை முருகேச பண்டிதர்,



"சோதிக்குள் சோதியன்" எனப் போற்றுகிறார். அனுபூதி நிலையில் இறைவனுடன் தாடலை போற் கூடி இறை போல் பேதமின்றி நிற்கும் ஆன்மா மெய்ச்சுடராய் விளங்கும். இதனை

**"சோதியா யன்பற் றொழுவா குளக்கருத்திற்**
**சோதிக்குமோர்மெய்ச்சுடர" (நீ. நூ.2)**

என்னும் பாடலடி எடுத்துரைக்கிறது.

செயலின் பொருட்டே வினை. இஃதே கன்மம், எனவே பற்றற்ற வினையே வீடு பேறாகிய முக்திக்கான நெறி. இதனை பண்டிதரின் "இல்லை பயனில் செயல்" என்னுமடி தத்துருபமாக விளக்கி நிற்கிறது. வினையறுத்து ஆன்மாவுக்கு அருள்பாலிக்குமிறைவன் உளதன்று எனக்கூறி பிற சமயவாதிகள் வாதுரைத்து பொருதி நின்ற போதிலும் "அவனுள்ள பொருள், என்றும் அவன் நிலைபேறுடைய பொருள்" என்பதை" ஒரு வனிலை யென்ன உரைத்தானை வைது பொருது நிற்பதென்ன பொருள்" என்னும் முருகேசபண்டிதரின் பாடலடி எடுத்துரைக்கிறது.

**"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்**
**ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்**
**கங்கைவார் சடைகரந்தார்க் கன்பராகில்**
**அவர் கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே"**

என்னும் நாவுக்கரசரின் பாடலடியின் உயர்வீச்சாக முருகேசபண்டிதரின்

**"வேடம் பலவானால் வீடும் பலவாமோ**
**நாடுமதஞ் சாதியினி ணண்ணுவதென் - கூடுமுண்மைச்**
**சாக்கியர்நன் னந்தனார் சான்றுமெய்யனபொன்றே**
**யாக்குமுயர் முக்தியனதை"**

(நீதி.நூல் 6)

என்னும் வெண்பாவடிகள் எடுத்துரைக்கிறது. இறைவனை நாடும் திருத்தொண்டனுக்கு சாதியில்லை, பேதமில்லை, குணமில்லை, குறியுமில்லை. அவன் சிவனடியான் அவன் எக்குலத்தில் பிறந்தாலும் தொழுகுலத்துக்குரிய மெய்யன்பொன்றே அவனை எந்தை ஈசனாக உயர்த்தி நிற்கும். இதன் அதி உன்னத தன்மையை நந்தியை விலகச் செய்த நன்னந்தனார் வாழ்க்கைக்கூடாக எடுத்துக்காட்டும் முருகேச பண்டிதரின் கவிச்சிறப்பு காத்திரமானது. கருத்தாழமிக்கது.

"கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே"

எனக்கூறும் ஔவையார் செயலின் செய்கை கண்டு 'சாதியிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் கொடுப்பார் உயர்குலத்தார் கொடார் இழிகுலத்தார்' என்பார் ஆனால் முருகேசபண்டிதரோ ஆடு, குதிரை அனைத்துக்கும் நாடும் காலுண்டென்பதால். சாதிவகை கூறலாம் ஆனால் மனிதருக்கு கிடையாது. மரங்கள் ஈனும் கிளைகளில் எவ்வாறு பேதமில்லையோ அவ்வாறே மனிதனிலும் பேதமில்லை இதனை

**"மானுடருக்கீது மரமொன்றே பல் கிளைகள் ஈனுமோ வெவ்வேறென"**

எனும் அடிகள் உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெள்ளென விளக்கி நிற்கிறது.

மனிதன் செய்யும் தொழில் பேதமுற்றாலும் மனிதனில் பேதமில்லை. குயவன் செய்யும் மட்கலத்தில் எவ்வாறு பேதமில்லையோ அவ்வாறே மனிதனும் பேதமற்றவன். இதனை சாதியென்று கொள்ளுவார் சக்கிரி மட்கலம் போல் ஆதலை யாய்ந்தறியாதார் (நீ.நூ.8) என்னும் வெண்பாவடி கொண்டு உணர்த்தும் பண்டிதர் மதம் போற்றுதற்குரியது; அது இகழத்தக்கதன்று. பற்றறுத்து அன்பும் அறிவும் துணைகொண்டு சேவிக்கும் மதம் எந்நாளும் இகழமுடியா பெருமிதம். இதனை "எம்மதமேனும் இகழற்க" என்னும் பாவடிகொண்டு விளக்கி நிற்பார்.

பயிலும் கல்வி வாழ்வுக்கு நலமாகும். எப்பொருளிருப்பினும் கல்வியின்றேல் அவ்வாழ்வு நலமாகா எனும் கருத்தை "நலமிசைமற்றெப் பொருளுமெய்தா

விதனினூஉங் குற்றதுணை மக்களுயிர்க்கில்லை மகி" என்னும் தொடருக்கூடாக விளக்கும் முருகேசபண்டிதர் 'இக்கல்வி நாள்தோறும் ஆவலுடன் கேட்டுணர்ந்து கற்க வேண்டியது; கேடுபடா ஓம்புபவனுக்கு வாட்டமில்லா பெருவாழ்வைத் தருவது' என்பார். ஈவோன் இறைவன்; அவன் சேவிப்பதற்குரியன்.; அவனைப் போற்றுதல் நன்று. இதனை "ஈவோன் அவன் எனினும் தேவன் என எண்ணிச் செவிவாயோ (நீ.நூ 12) எனும் அடி எடுத்துரைக்கிறது.

"கல்வியறிவுடையாரே பொருளுடையார்" (நீ.நூ.14) அக்கல்வியின் உடைமையாளனாக விளங்கும் வண்புலவனுக்கு எப்பொருளும் பிற்புறமே என உரைக்கும் புலவர் "இன்பம் நாடிபுறப் பொருளீட்டல் துன்பமேயாயினும் அகப்பொருட்கல்வி துன்பந்தருவதுபோற் தோன்றினும் தாவாத இன்பம் புரியும்" எனப் பதினாறாவது செய்யுள் கொண்டு எடுத்துரைப்பார். வாழ்வு உய்தி பெற மகவுக்கு தந்தை நல்கும் செல்வம் அறிவுச்செல்வமேயன்றி பொருட் செல்வமல்ல இதனை,

**"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்"**

என்னும் வள்ளுவரின் வாயுறை வாழ்த்துக்கு ஒப்ப பண்டிதரின் "மக்கட்குத் தந்தை வருந்தி வைக்கு மாநிதியம் விச்சை மற்றலல்லாது வேறில்லை என்னும் வெண்பாவடி எடுத்துரைக்கிறது. இதனைப்போன்று உத்தரவேதத்தின் "கண் உடையர் என்பவர் கற்றோர்" எனும் கருத்துக:கு ஒப்ப பண்டிதரின் "சீரெல்லாம் கண்ணுடையான் போல் எழுத்து எண்" என்னும் பாடலடி வெளிப்படுகிறது.

கல்வியறிவுடையவனின் சிறப்பை பண்டிதரின் இருபத்தொராவது செய்யுள் எடுத்துரைக்கிறது. கல்வி அறிவுடையவன் துன்பம் அடையான். இடும்பை தீண்டா அவன் என்றும் இளமையுடையவனாக இருப்பான். பொன்னையடைந்தவர் பெறமுடியா கல்விப்பொருளோடு இருப்பான் என்கிறது அச்செய்யுள். புலி பசித்தாலும் புல்லானதை உண்ணாது; இதனைப் போன்று கற்றாய்த மேலோரும் கடவன செய்தற்கன்றி மற்றேதும் செய்ய மதியார். எனவே உரியதை உள்ளவாறு செய்தலே கற்றோருக்கு உவப்பை தரும் எனக் கூறும் முருகேசபண்டிதர் பொருட்செயலின் பொருட்டு பெற்றவரை விடுத்து பெருந்தூரம் சென்று கல்வி கற்பது குற்றமெனக் கூறிக்கடிவார்.

எல்லோரையும் வலியராக்கும் பொருள் உண்டெனின் அது கல்வியாகும். எனவே கல்வியே மிக்கது. அதுவே பயனுடைபொருளுமாகும். அக்கல்வி அள்ள அள்ள குறையாத நிறைவுடை ஊற்றாகும். எனவே கல்லாத கல்வி பல்லளவு இருக்க எல்லாம் அறிந்தார், இவ்வுலகில் ஏதேனுமொன்றறியார் எனக் கூறும் முருகேசபண்டிதர் .

**"தெரியாத ஒன்றைத் தெரியுமெனச் சொல்லி**
**அருமை குலைவா ரறிவார்" (நீ.நூ99)**

வாழும் காலம் குறிது அதனால் காலத்துக்கேற்ப கற்றல் சால்புடையது. அதுமாத்திரமன்றி படியெடுத்து காணும் அறிவின்பயன் அடியெடுத்து முக்தியடைதல். எனவே பயனறிந்து கற்றல் சிறப்பென்பது முருகேசபண்டிதரின் கருத்து.

ஆழறிவு கொண்டு அரிய நற்கல்வியின் சிறப்பைக் கூறிய புலவர் வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கான அறக்கருத்துக்களை அரிய தமிழ்கொண்டு எடுத்துரைக்கிறார். ஈதலென்பது வாய்மை, தவம், சீலமன்பு கொண்டு ஈயப்படுவது இல்லாமலும் மனமொப்பி ஈயும் ஈகை என்றும் சிறப்பை தருவது. எனவே காக்கை விழிமணிபோல் காதலனும் காதலியும் கருத்தொருமித்து நீக்கமின்றி வாழ்வதே அறம் என்றார். இவ்வாறு வாழும் வாழ்வில் பொய்யுரை கூறாது மெய்யுரை கூறி வாழ்தல் சிறப்பு ஈசனடி தொழுது மாசகற்றி வாழ்தல் அதனிலும் சிறப்பு எனக்கூறும் முருகேசபண்டிதர் கொண்ட சினத்தால் கொடுஞ்சொல்லுரையாது கற்றறிந்து அதற்குத் தக ஒழுகுதலே நெறியென்பார். நல்லறம் திறம்பாமை கட்டிய காரிகையருக்கு அழகு என உரைக்கும் முருகேசபண்டிதர் "அப்பெண் கொண்டவனைத் தன் அழகால்



தாங்குவாள்; உண்டியிசைந் தீயாளொளித்து நிதி சேமிப்பாள். அண்டும் அச்சத்தாற் பணிகளாற்றுவாள் என்றும் போற்றுகிறார். அதனைப் போலவே கனவானாகிய கணவனும் இல்லாளும் ஒத்தியைந்து மனமொப்பி வாழ வேண்டும் என்பார். மாது முன்னால் வந்து குடிகொள்ள மதுவினை உண்பவர் பெரும் புலையர் எனக் கூறிக் கண்டிக்கும் பண்டிதர் அவர்கள் சாதிமுறையெண்ணாது தம் குடிமை எண்ணாது பாதகத்துக்கு அஞ்சி பழியெண்ணாது வாழ்பவனே மேன்மக்கள் என்பார். இவ்வாறு வாழும் காலத்தில் மனிதன் ஆனவன் செய்வன திருந்தச் செய்ய வேண்டும். அவ்வாறு செயல்களை நன்னுறச் செய்யும் காலத்தில் செல்வமின்றி வருந்த நேர்ந்த போதிலும் செயல் கைவிடலாகாது என உரைக்கும் முருகேசபண்டிதர் "நல்லறம் தன்னை மிஞ்சி இல்லை என்பார். எனவே தன் முயன்ற அறம் செய்து தகைசார் அறனோடு நிற்பவனே மனிதன் ஆவான்.

அறத்தின் பாற்பட்டு ஆளும் ஆண்டகைமை பற்றிக் கூறும் முருகேசபண்டிதர் கள்ளோடு காமம் நீத்து தான் சார்ந்த குடிகளுக்கு இன்புற்று ஈவதை வேந்தனின் உண்மை அறம் என உரைப்பார். நீசனான போதிலும் நெறியின் கண் அரசாளும் வேந்தன் ஈசனாக மதிக்கப்படுவான் என்பார். "பேதையதிகாரம் அரசனிலும் மேலா மறிஞர் (39) என முருகேசபண்டிதர் அரசனுக்கான பண்பினை எடுத்துரைத்த போதிலும் மன்னனுக்கு செங்கோண்மையே சிறப்பினைத் தருமென்பார். இதனைப்போன்று அந்தணருக்கு வேதமும் அன்புடையோருக்கு வாய்மையும் உழவருக்கு உறுதி பயக்கும் மேழியும் தக்க சிறப்பைத் தரும். எனவும் உரைப்பார். உழவுத்தொழிலின் மேன்மையை பொய்யாமொழியின்

**"பலகுடை நீழலும் தம் குடைக்கீழ் காண்டர்**
**அழகுஉடை நீழ லவர்"**

வாக்கிற்கு 'ஒப்ப

**"ஏர்த்தொழிலான் மிக்க இயல்புடைய ராயிருந்தும்**
**பார்நிவர் கீழ் வேலையிலார் பார்த்தற்க - ஊழ்த்திறமோ**
**உள்ளது போதுமென் றுன்னா துடையவரும்**
**அன்னவர் கீழ் நிற்கு மவா" (நீதிநூல் 30)**

என்னும் வெண்பாவடி கொண்டும் விளக்குவார்.

அறத்தின்பாற்பட்டு வாழ்தலுக்குரிய சால்பு நெறிகளைச் சாற்றும் புலவர் வாழ்வில் நீக்கப்படவேண்டிய செயல்களையும் எடுத்துரைப்பார்.

**"காலத்தைச் சூதிற் கழிப்பார் பொருளை விற்று**
**ஞாலத் தேவரு நகையாட - நூலகத்தைப்**
**பெண்டீரிழக்கப் பிழைப்பேனென் றெண்ணி யெண்ணிக்**
**கண்டவரே யின்மை தடை"**

எனக் கூறிச் சூதாடல் தீதென உரைக்கும் முருகேச பண்டிதர் நல்லவருக்கு ஈயாத பொருள் புல்லரிடமுள்ள பொருள் எனக் கூறி கொடாதவனை வையவும் செய்கிறார்.

நிதியை நல்வழியில் தேடட வேண்டும். அவ்வாறன்றி நல்வழியற்றுத் தீயவழியில் தேடிய செல்வம் பூதமெனப் போற்றிக் காத்த போதிலும் ஓர் நாள் ஏதுமில்லாமற் போகும் என உரைக்கும் பண்டிதரின் கருத்து ஆழ் பெறுமானமிக்கது.

நட்பற்று பொருளுக்காகப் பழகும் நாணயமில்லா ஈனர் பற்றி "அன்னவருக் கன்னவரா யாடிப் பொருள் பறிப்பார் இன்னியரோ செய்ந்நன்றி யெண்ணாரே" என்னும் வெண்பாவடி கொண்டு உரைக்கும் முருகேச பண்டிதர் "அன்னவரை நம்பற்க அவர் நட்டாற்றில் விட்டகல்வர் எனவும் கூறி நிற்பார். இதனைப் போன்று "தீயன் செய்யும் வணக்கம் தீதெனவே முடியும் அது நன்மை பயப்பதன்று எனக் கூறும்

முருகேச பண்டிதர் தூயர் பகைத்தாலும் நன்று பகுத்தறிய மாட்டார். நகைத்து வெகுளிவார்" (நீ. நூ. 66) என்றும் உரைப்பார்.

"நெறியற்று வாழும் பெண்ணைத் தீண்டல்;" இழிவு என்பதை முருகேச பண்டிதர் மிக நளினமாகவும் அதே சமயம் நாகரீகமாகவும் எடுத்துரைப்பார்.

"உண்டமெச்சி உண்கை யுடனுண்கை உண்ணவெனக்
கொண்டவுணா வுண்கை கொளாதுண்கை"

என்னும் வெண்பாவடிக்கூடாக விரியும் இச்செய்யுளில் நெறி தவறி வாழும் நங்கையரைத் தீண்டுமாடவன் தீண்டத்தகாத புல்லனாகச் சித்திரிக்கப்படுகிறான். "சொல் பொருள் பின்வரு நிலையணியை" கற்றோரன்றி ஏனையோரும் நயக்கும் வகையில் இச்செய்யுளில் கையாண்ட புலவர் இதனைப் போன்று 14, 16, 31, 59, 61, ஆம் செய்யுட்களிலும் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது. "மறு தலைத்த மொழியான் வரினும் முரண் என்னும் முரண் தொடை 16, 17, 25, 45, 52, 54, 58, 83, 90, 92, 95 செய்யுட்களில் மிகத் தத்துருபமாகக் கையாளப்படுகிறது.


'அறப்பசித்தும் வெய்ய மிடிவரினும் தாங்கரிய நோய்வரினும் புல் தின்னுமோ வேங்கை' என்னும் பழமொழியை உவமையாகக் கையாண்டதைப் போல் முருகேச பண்டிதர் 7, 8, 14, 17, 19, 66, 75, 77, ஆகிய செய்யுட்களிலும் உவமை, உவமைத் தொடர்களையும் கையாண்டுள்ளார். நாலுண்டு தீயுமிழ்வார் நோக்குக்கு பாலுண்டு நஞ்சுமிழும் பாம்பினத்தைக் கூறுவதும் பேதமில்லா வாழ்வுக்கு மரமொன்றின் பல்கிளையும் சக்கிரி மட்கலத்தையும் உமையாகக் கூறுவதும் முருகேச பண்டிதரின் கவித்துவத்துக்கு தக்க சான்றுகளாகும்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவமை என்னும் மெய்பாடுகள் தோன்றும் வண்ணம் நீதி நூறை முருகேச பண்ணடிதர் உருவாக்கியிருப்பது சாலச் சிறப்பாகும். எல்லாமறிந்தாருமில்லை; எதுவுமறியாருமில்லை. எனவே அகந்தையென்பது வீண் இதனை நகையென்னும் சுவை விரவும் வண்ணம் "தாழ்ந்த சிறுமுயலாற் தாவிய தன்றோ குழியில் எனக் குறிப்பிடுவார் இதனைப் போன்று சிச்சீ குரைமுக னொன்றே குவலயத்தி னட்பு" என்னுமடியில் இளிவரல் என்னும் மெய்ப்பாடு இயைந்து நிற்கிறது. இதனைப் போன்று "அச்சத்தா னட்புறினு மல்லோன் மறைந்து பழிச் சொற்களையே சொல்லி மிகத் தூறுவான் (41) என்னும் வெண்பாவடியும் இளிவரலை விளக்கி நிற்கிறது. இவைபோல "இல்லாளு மொத்திங் கெதிர்ப்பாரேற் பாவமெனும் அல்லான் புறக்கொடுக்கு மாங்கு" என்னும் அடியில் பெருமிதமும் "ஈசனடி மறந்தாருக்கு கெய்துவது மன்னு நரகன்றி இகந்தன்னி லெய்த விலை" எனும் அடியில் அச்சமும் "துய்க்கநிதி கோடியென வைத்தார். குலமக்க தம்முயிரைக் கோடியென வைத்தாரோர் கூற்று என்னும் பாவடியில் இளிவரலும் கூறப்பட்டன. நீதிக்கருத்துக்களை அறிவுறுத்தும் இந்நூலில் இயன்ற இடமெல்லாம் சுவை பரவுறும் வகையில் மெய்பாட்டை அமைத்து முருகேச பண்டிதர் நூலை யாத்திருப்பது கற்பவருக்கு இனிமை பயப்பதாகவே அமைகிறது.

நீதியின் உரைகல்லாக விளங்கும் இந்நீதி நூறு பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய நீதி இலக்கியங்களுக்குள் போற்றத்த பொருட்பொலிவும் கவிதைச் சிறப்பும் வாய்ந்த இலக்கியமாகக் கருதப்படுகிறது. சொற்சுருக்கமும் கருத்தாழமும் கலை மேவும் கவிநயமும் கொண்டு விளங்கும் இந்நூல் என்றும் காலத்தால் அழியாத கருத்துப் பெட்டகம் எனலாம்.

(வளரும்...)





# அண்ணா - 50

ஒரு பிரதேசத்தின் வளங்களாகக் கருதப்படுபவர்கள தன்னுடைய செயல்களால் தனக்கும் பிறருக்கும் நன்மைகளை ஏற்படுத்துபவர்களாக இருப்பர். அவ்வகையில் எத்தனையோ அரிய செயல்களால் வழிகாட்டிகளாக விளங்குபவர்களை வலிகாமம் தெற்கு பிரதேசத்திலே காணலாம். முயற்சியால் மேன்னிலையை அடைந்தவர்கள் பலர் இருந்தாலும், எளிமையும் இறைசிந்தனையும் வாய்க்கப் பெற்று என்றுமே பண்பட்டோராகச் சிறந்து விளங்குபவர்கள் ஒரு சிலரே.

அவ்வாறான ஒரு சிலரில் முதன்மையானவர் எல்லோராலும் "அண்ணா கோப்பி நடராசா" என அறியப்பட்டுள்ள பெரியார் **இணுவில் பொன்னையா நடராசா** அவர்கள் ஆவார்.

*"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்: கவலை உனக்கில்லை ஒத்துக் கொள்"* என்னும் பாட்டின் பொருளாக இவரது தொழில் முயற்சிகளைக் குறிப்பிடலாம். முயற்சிகள் எல்லாமே வெற்றிகளைத் தராவிடினும், நமக்குச் சரியானது எது என்பதை கண்டறிவதற்காக தொடர்ந்த முயற்சி அவசியம் என்பர். இதனைப் பல்வேறு பெரியார்களின் ஆசிகளாலும் ஆலோசனைகளாலும் உதவிகளாலும் அடைந்த திரு நடராசாஅவர்கள் மேலும் மேலும் என்று முயற்சித்தலை முதன்மையாக்கி வெற்றிபெற்றவராகத் திகழ்கின்றார்.

ஒருவரது அனுபவங்கள் ஏனையோருக்குப் பாடங்களாக அமைகின்றன. அவ்வகையில் பலரது உதவிகளை அனுபவங்களை உள்வாங்கி தனக்கே உரிய பண்புகளுடன் அதனைச் செயலாக்கி அண்ணா தொழிலகம் என்னும் ஆலவிருட்சத்தை உண்டாக்கியுள்ளார்.

மில்க்வைற் அதிபர் போன்றோரின் அனுபவங்களும் உதவிகளும் இவரது வளர்ச்சிக்கு எவ்வாறு உதவினவோ அவ்வாறே இன்று இவரது அனுபவங்களும் உதவிகளும் நாட்டின் சகலருக்கும் உதவுவனவாக அமைந்துள்ளன.

விவசாயம், கைத்தொழில், வர்த்தகத்துறைகளில் ஈடுபட்டு பலருக்குத் தொழில்வாய்ப்புகளை வழங்கி வரும் அண்ணா தொழிலகம் ஐம்பது ஆண்டு களைப் பூர்த்தி செய்து தேசத்தின் உயர் விருதுகளையும் வென்று சிறப்புப் பெற்றுள்ளது. அண்ணா தொழிலக அதிபர் நடராசா மட்டுமல்லாமல் அவரது குடும்பத்தினரும் இப்பிரதேச நன்மைகளுக்காகப் பணியாற்றுபவர்களாக உருவாகிச் செயற்படுகின்றார்கள். இதுவும் தந்தையாரின், சிறந்த உருவாக்கும் பணிக்கு அணிசெய்யும் செயல்களாகும்.

இறைசிந்தனையுடன் எளிமையான வாழ்க்கையைத் தானும் வாழ்ந்து, ஏனையோருக்கும் வழிகாட்டியாக விளங்கிவரும் இம் மண்ணின் மைந்தரின் சமயப்பணிகளும் சமூகப் பணிகளும் என்றென்றும் நினைவில் கொள்ளப்பட வேண்டியன.

இம்மண்ணின் மைந்தரையும் குடும்பத்தினரையும் அண்ணா நிறுவனத்தினரையும் பொன்விழா ஆண்டிலே 'வெள்ளிமலை' வாழ்த்தி நிற்கின்றது.

## அண்ணா தொழிலக உற்பத்திகள்

**மாவகை**

அண்ணா அரிசிமா, அண்ணா ஆட்டாமா, அண்ணா குரக்கன்மா, அண்ணா ஒடியல்மா, அண்ணா புழுக்கொடியல் மா, அண்ணா பச்சை உழுந்துமா, அண்ணா வறுத்த உழுத்தம்மா, அண்ணா திடீர் தேசைமா, அண்ணா திடீர் அப்பமா.



**தூள்வகை**

மிளகாய்த்தூள், தனி மிளகாய்த்தூள் மல்லித்தூள், மஞ்சள்தூள், சரக்குத்தூள், ரசப்பவுடர், சாமபார், பவுடர், பெருஞ்சீரகத்தூள், சிறுசீரகத்தூள்

## ஊதுபத்தி வகைகள்

**ரொபி, இனிப்பு வகைகள்**

அண்ணா ரொபி, புளியம்பழ ரொபி, மோல்ட் ரொபி, பட்டர் ஸ்கொட்ச் பெப்பர்மின்ட், தோடம்பழ ரொபி, சீரக இனிப்பு.

**ஏனைய உற்பத்திகள்**

அண்ணா கோப்பி
அண்ணா மல்லிக் கோப்பி
அண்ணா தேயிலை
அண்ணா பற்பொடி
அண்ணா வீபூதி
அண்ணா சாம்பிராணி
அண்ணா நல்லெண்ணெய்
அண்ணா நீலம்,
சொட்டு நீலம்

## பண்ணை உற்பத்திகள்

பால், தயிர் நெய், முட்டை, கோழி, இறைச்சிக் கோழி
மரக்கறி உற்பத்தி
பழவகை உற்பத்தி
வாழைப் பூ வடகம், வேப்பம்பூவடகம்
மோர் மிளகாய்

## விலங்குணவு வகைகள்

மாட்டுத்தீன், கோழித் தீன்

அண்ணா தொழிலக பொன்விழாவை ம[illegible]
'அண்ணா பொன் ஏடு' வெளி[illegible]
பாருங்களேன் நிச்சயம் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்.

தொகுப்பு – எஸ். ரி. அருள்

# நூலகமும் நிகழ்வுகளும்




தேசிய நூலக வாரம் 2009 மே மாதம் 12ந் திகதி முதல் 18ந் திகதிவரை சுன்னாகம், உடுவில், ஏழாலை நூலகங்களில் கொண்டாடப்பட்டது. 12.05.2009ல் சுன்னாகம் பொதுநூலகத்தில் இடம்பெற்ற சமய வழிபாடுகள், ஆசி உரைகள் நிகழ்வில் மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சிநேயர் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள், சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலய பங்குத்தந்தை அருட்திரு. தா. நிருபன் நிஷானந், தாவடி பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா சேவாநிலைய வடபிராந்திய ஆத்மீக இணைப்பாளர் க. மகேஸ்வரன், வலி. தெற்கு பிரதேசசபை பிரதம முகாமை உதவியாளர் கெ. தவராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.




வாசகர் கல்வியூட்டல் பயிற்சிப்பட்டறையில் யாழ்ப்பாண பொதுசன நூலகர் திரு. ச. தனபாலசிங்கம் விரிவுரையாற்றினார்.





13.05.2009ல் சுன்னாகம் பொதுநூலகத்தில் மூத்த பிரஜைகளுக்கான நூலக சேவைப்பிரிவை வ. சுரேஸ்குமார் (சமூக சேவை அலுவலர், உடுவில் பிரதேச செயலகம்) திறந்துவைத்தார்




14.05.2009ல் சுன்னாகம் பொதுநூலகத்தில் இளைஞர் மகளிர் நூலக சேவைப்பிரிவை உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம. ஞானவேல் ராஜா திறந்துவைத்து உரையாற்றினார்.




சிறுவர் நூலகச்சேவைப்பிரிவு உடுவில் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை மேம்பாட்டு அலுவலர் செல்வி. நா. யோகேஸ்வரி திறந்துவைத்து சிறுவர் வாசகர்களுடன் நூல்களைப் பார்வையிட்டார்.



18.05.2009 தேசிய நூலகவார நிறைவின்போது சமுதாயத் தகவல் சேவைப்பிரிவைத் திறந்துவைத்து இன்ரநெற் தொடர்பை பிரதேசசபைச் செயலாளர் திருமதி. ச. சொக்கலிங்கம் ஏற்படுத்திவைத்தார்.

உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் ஓர் அம்சமாக சுன்னாகம் நூலகத்தில் இடம்பெற்ற பிரதேச புகைப்படக் கண்காட்சியினை திறந்துவைத்த கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. சி. ஜெயசங்கர் கண்காட்சியைப் பார்வையிட்டார்





தேசிய நூலக ஆவணமாக்கல் சபையால் மகாண மட்டத்தில் சிறந்த நூலகமாக சுன்னாகம் நூலகம் தெரிவுசெய்யப்பட்டு உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் கௌரவ ஜானக பண்டார தென்னக்கோன் அவர்களால் விருது வழங்கப்பட்டது.






Abans
சகல விதமான மின்சாதன பொருட்களையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றிட
சுன்னாகம் நகரில்
Abans
காட்சி அறை
வட்டி இன்றிய மாதாந்த
தவணைமுறையிலும்
பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்
Life's Good
LG
Abans
160A, K.K.S.வீதி
சுன்னாகம்
தொ.பே.021 2240440
Krishna Printers, Chunnakam